வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 14.06.2021 திங்கட்கிழமை | இதழ் : 193 | பக்கங்கள் : 16




# ராஜபக்ஷக்களின் அனுமதியுடனே எரிபொருள்களின் விலை உயர்வு

## ‘மொட்டு’ கட்சியின் பொதுச்செயலாளர் சாகரவே பதவி விலக வேண்டும் என்று கம்மன்பில பதிலடி



கொழும்பு, ஜூன் 14

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜ பக்ஷ உள்ளிட்ட அமைச்சர்கள் அனைவரும் இணைந்தே எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுத்தனர். இதற்கு நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச எழுத்து மூலம் அனுமதி வழங்கினார். எனவே, எரிபொருள் விலை அதிகரிப்பானது அரசின் முடிவாகும். அது என்னால் எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவு கிடையாது. அரசின் அறிவிப்பையே நான் அறிவித்தேன்.”

15

## பொதுஜன பெரமுன ஊடகவியலாளர் சந்திப்பு திடீர் ரத்து

கொழும்பு, ஜூன் 14

அமைச்சர் உதய கம்மன்பில பதவிதுறக்கவேண்டும் என பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர சாரியவாசம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைச்சர் கம்மன்பில நேற்று பதிலடி கொடுத்திருக்கும் நிலையில், இன்று நடைபெறவிருந்த பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பு திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பொது ஜன பெரமுன சார்பில் காமினி லொக்குகே, சாகர காரியவாசம் ஆகியோர் இன்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்தகொள்வார்கள் என நேற்று நண்பகலளவில் அறிவிக்கப்பட்டி

15

## 2,329 தொற்றாளர்

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் நேற்றும் 2 ஆயிரத்து 329 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 23 ஆயிரத்து 163 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா விலிருந்து குணமடைந்தவர்

15

## யாழில் 24 பேர் உட்பட வடக்கில் 27 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணத்தில் 24 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 27 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆய்வுகூடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளிலேயே இவர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று 731 பேரின் பி.சி.ஆர். மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்படி காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவை சேர்ந்த 4 பேரும், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையை சேர்ந்த 4 பேரும், யாழ்ப்பாணம்

15

## எரிபொருள் விலை அதிகரிப்பு ஏன்? ஜனாதிபதி ஊடகப் பிரிவு விளக்கம்

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்குத் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கான பொது வேலைத்திட்டம் ஒரு பிரதான காரணியாகும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் வங்கிக் கட்டமைப்பைப் பலப்படுத்தி வட்டி விகிதத்தை முறையாக பேணுவதற்கும், அந்நியச் செலாவணியைப் பாதுகாக்கவும் மற்றும் பொது மக்களின் சுகாதாரப் பாது



காப்பை மேம்படுத்தவும் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் ஒன்றே இந்த எரிபொருள் விலை அதிகரிப்பு என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஜூன் 11ஆம் திகதி

15

## படகு மூலம் ஆயுதக்குழு ஒன்று தமிழகத்துக்கு ஊடுருவ முயற்சி?

### கடற்கரைப் பகுதிகளில் கடும் பாதுகாப்பு

சென்னை, ஜூன் 14

இலங்கையிலிருந்து ஆயுத குழுவொன்று தமிழ்நாட்டிற்குள் நுழைவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது என இந்திய புலனாய்வு பிரிவினருக்கு தகவல்கிடைத்ததை தொடர்ந்து தமிழ்நாட்டில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஐஎஎன்எஸ் செய்தி சேவை தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை மத்தியபுலனாய்வு முகவர் அமைப்பு விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்து கன்யாகுமாரி, தூத்துக்குடி, இராமேஸ்வரம், சென்னை ஆகிய பகுதிகளில் பொலிஸார்

15

## சாகரவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

### அரச பங்காளிகள் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 14

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்தின் செயல்பாடு ஆளும் தரப்பு பங்காளிக் கட்சிகள் இடையே கடும் கோபத்தையும், அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இது விடயம் குறித்து ஆளும் தரப்பு பங்காளிக் கட்சிகள் கூடி

15

## அரசை வீழ்த்த வெளிப்படையாக திட்டத்தை முன்னெடுக்க நேரிடும்!

### சுமந்திரன் எம். பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

“கோவிட் -19 வைரஸ் இடர் காலத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசாங்கம் செய்யும் முறையற்ற ஆட்சியை உடனடியாக நிறுத்தவேண்டும். அரசாங்கம், தமது தவறுகளை உடனடியாக திருத்திக்கொள்ளாது போனால்,

15




## பயங்கரவாத தடைச் சட்டம் பற்றி நாடாளுமன்றமே முடிவெடுக்கும்



### அமைச்சர் சரத் வீரசேகர கருத்து

கொழும்பு, ஜூன் 14

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பது தொடர்பில் இலங்கை நாடாளுமன்றம்தான் தீர்மானிக்கும். அதனை வேறு எவரும் தீர்மானிக்க முடியாது.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

1970இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் படு தோல்வி அடைந்த டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி, பின்னர் எழுபத்தி ஏழில் அசுர வேகத்தில் மீண்டு எழும்பியது.

நூற்று ஐம்பத்தி ஒரு உறுப்பினர்களைக் கொண்ட அப்போதைய பாராளுமன்றத்தில் சிறிமாவோ தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிகளுடன் இணைந்து தேர்தலைச் சந்தித்து, நூற்றுப் பதினாறு தொகுதிகளில் வெற்றிபெற, வெறும் பதினேழு தொகுதிகளில் மாத்திரம் டட்லி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது.

பின்னர், எழுபத்தியேழில் ஜே. ஆர். தலைமையில் தேர்தலை சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சி, நூற்று அறுபத்தி எட்டு தொகுதிகளில் தனித்து நூற்று நாற்பது தொகுதிகளில் வெற்றிபெற்றது.

அந்தத் தேர்தலில் தமிழீழத்திற்கான வாக்கெடுப்பாக தேர்தலைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணி பதினெட்டு இடங்களில் வெற்றி பெற, சிறிமாவோ தலைமையிலான கூட்டணி வெறும் எட்டுத் தொகுதிகளில் மாத்திரமே வெற்றிபெற்றது. அதனால், எதிர்க்கட்சி அந்தஸ்தை தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றுக் கொண்டு ஜனநாயக ரீதியாக எதிர்க்கட்சி அந்தஸ்தை பெற்றது. அப்போதைய தமிழர் தலைவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

வெறும் எட்டு இடங்களில் மாத்திரம் வெற்றிபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சி பின்னர் சந்திரிகா தலைமையில் மீண்டெழுந்தது. அதாவது, ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் தோல்வி என்பது புதியதல்ல.

இன்றைய ஐக்கிய தேசியக் கட்சி ரணில் தலைமையில் பல தோல்விகளை சந்தித்து மீண்டு வந்ததும் வரலாறு.

"அரசியலில் ரணில் ஒரு நரியன்" - இப்படிச் சொன்னவர் வேறு யாருமல்ல. நமது அன்ரன் பாலசிங்கம்தான் ஒரு தடவை லண்டனில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் உரையாற்றும்போது இவ்வாறு வர்ணித்தார்.

இன்று தெற்கு அரசியலில் ரணில் தவிர்க்க முடியாத ஒருவர் என்பதை நிரூபித்து வருகிறார்.

ஐக்கிய தேசியக்கட்சிக்கு கடந்த தேர்தலில் படு தோல்வி ஏற்பட்டதும், ஒருவர்கூட வெற்றி பெற முடியாமல் போனாலும், அந்தக் கட்சிக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை நிரப்பாமல் வைத்திருந்ததும் ரணிலின் அந்த 'நரி'த்தனத்திற்கு சான்று.

பல தடவைகள் கட்சி செயல்குழு அவரை அந்த இடத்துக்கு நியமித்தபோதிலும் அதனை நிராகரித்து வந்த ரணில், இப்போது ஏற்றுக்கொண்டிருக்கிறார். அதற்கான காரணத்தை கண்டுபிடிக்க ஒன்றும் அரசியல் ஞானம் தேவையில்லை.

அவர் அப்போது அங்கே போயிருந்தால், மிக அவமானகரமான நிலையிலேயே போகவேண்டிவந்திருக்கும். ஆனால், இன்று நிலைமை அப்படியல்ல. ரணில் பாராளுமன்றத்திற்கு தேவை என்னும் குரல் இப்போது ஓங்கி ஒலிக்கின்றது.

இந்தப் பின்னணியில், பாராளுமன்றம் போகவிருக்கும் ரணில் தனித்து ஓர் ஆளாகப் போக விரும்பவில்லை என்றும் அதனால் சஜித் அணியிலுள்ள சிலரை தன்பக்கம் அரவணைத்துக்கொண்டு ஒரு குழுவாகவே பாராளுமன்றம் நுழைய விரும்புகிறார் எனவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் செய்தியில் உண்மை இருக்கும் என்பதை சஜித் அணியே நிரூபித்து வருகின்றது.

அண்மையில் சஜித் அணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டம் நடைபெற்றபோது சஜித் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தியதும், இப்போது இருபத்தி இரண்டாம் திகதி ரணில் பாராளுமன்றம் செல்லவிருக்கும் நிலையில் இருபத்தி ஓராம் திகதி சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்கள் குழுக் கூட்டம் நடைபெறவிருப்பதும் உள்ளுக்குள் ஏதோ நடக்கின்றது என்பதை பறைசாற்றுகின்றது.

எல்லாம் மலிந்தால் சந்தைக்கு வரும்தானே. அதுவரை பொறுத்திருப்போம்...!

- ஊர்க்குருவி

# கம்மன்பில ராஜிநாமா கோரிக்கையின் பின்னணியில் உள்ள 'உள்குத்து' என்ன?

## கேள்வி எழுப்புகின்றார் மனோ கணேசன்



கொழும்பு, ஜூன் 14,

மக்கள் ஏற்கனவே வாழ்க்கை செலவு நெருக் கடியில் சிக்கி தவிக்கும் வேளையில், எரிபொருள் விலையை ஏற்றியமைக்கு பொறுப்பேற்று எரிபொருள் அமைச்சர் உதய கம்மன்பில ராஜிநாமா செய்ய வேண்டுமென கூறுவது யார்? ஆளுகின்ற பொதுஜன பெரமுன கட்சியின் பொது செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. அரசின் இந்த திடீர் 'நன்ன டத்தையை' பார்த்து, "உலக மகா நடிப்புடா" என நாடு முழுக்க மக்கள் மயங்கி வாயடைத்து நிற்கிறார்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ எம்.பி. தனது சமூக உடகங்களில் கூறியுள்ள கருத்தை ஊடகங்களுக்கு மேலும் விவரித்து கூறியுள்ளதாவது,

பிழை நடந்தால், இப்படி பொறுப்பேற்று ராஜிநாமா செய்வற்கு நல்லதே. அது நாகரீக அரசியலே. ஆனால், இந்த அரசின் வரலாறு இப்படி இல்லையே. ஆகவே, திடீரென அரசு இவ்வளவு நாகரீகமாக செயல்படுவதை பார்க்கும் போது, "நீங்கள் ஒன்றும் அவ்வளவு நல்ல அரசாங்கம் கிடையாதே" என மக்கள் சந்தேகத்துடன் அங்கலாய்கிறார்கள்.

மக்கள் நெருக்கடியில் இருக்கும் வேளையில், எரிபொருள் விலையை ஏற்றியமைக்கு பொறுப்பேற்று எரிபொருள் அமைச்சர் (கம்மன்பில) ராஜிநாமா செய்ய வேண்டுமென கூறுவது, ஆளும் பொதுஜன பெரமுன என்ற ஆளும் கட்சியின் பொது செயலாளர் சாகர காரியவசம்.

கோவிட்19 தொற்றை கட்டுப்படுத்த உரிய வேளையில் தடுப்பூசிகளை வாங்க இந்த அரசு தவறி விட்டது. மிகவும் நட்பு நாடு என்று இவர்களே கூறிக்கொள்ளும் சீன நாடுகூட தங்கள் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியை, பங்காளாதேஷுக்கு 10 டொலர் விலையிலும், இலங்கைக்கு 15 டொலர் விலையிலும் தருகிறது. தடுப்பூசியை தேடி மக்கள் அல்லோல கல்லோலப் படுகிறார்கள். இவை அனைத்துக்கும் பொறுப்பேற்று ராஜிநாமா செய்ய இங்கே ஆளில்லை.

நடுக்கடலில் தீப்பிடித்த இரசாயன பொருள் கொண்ட கப்பலை, கொழும்பு துறைமுகத்தை நோக்கி வரச்சொல்லி, கடல் வளத்தையும், மீனவர் வாழ்வாதாரத்தையும் அழித்தவர் யார் தெரிய வில்லை. "அவரை கண்டால் கூட்டி வாங்க" என, பாணந்துறை முதல், புத்தளம், மன்னார் வரை மேற்கு கரை முழுக்க மீனவ மக்கள் பொங்கி நின்று கேள்வி எழுப்புகிறார்கள். "இதற்கு நான் தான் பொறுப்பு" என பொறுப்பேற்று ராஜி நாமா செய்ய இங்கே ஆளில்லை.

இந்நிலையில் திடீரென அரசு இவ்வளவு நாகரிகமாக செயல்படுவதை பார்க்கும் போது, எமக்கு சந்தேகம் வருகிறது. இதற்குள் உள்ள உள்குத்து என்ன என்று கேட்க தோன்றுகிறது. தமிழ் சினிமா சிரிப்பு நடிகர்களின் "நீ ஒன்னும் அவ்வளவு நல்லவன் கிடையாதே?" என்ற பிரபல சிரிப்பு சந்தேக வசனம் ஞாபகத்தில் வருகிறது.

உண்மையில், அமைச்சரவை தீர்மானத்தின் படியே விலை தீர்மானிக்கப்படுகிறது. அமைச்சரவையில் வாழ்க்கை செலவு உப குழு இருக்கிறது. அதில் தான் விலை வாசி முடிவுகள் எடுக்கப்பட்டன. அமைச்ச ரவை அமைச்சராக இருந்த எனக்கு இதுபற்றி நன்கு தெரியும். அமைச் சரவை பத்திரங்களை யார் முன் வைத்தாலும், முடிவு எடுக்கப்பட்டால் அதுபற்றி முழு அமைச்சரவையும் பொறுப்பு ஏற்கவேண்டும்.

இந்த வாழ்க்கை செலவு உப குழுவில் யாரெல்லாம் இருக்கின்றார்கள்?

நிதி அமைச்சர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, வர்த்தக அமைச்சர் பந்துல்ல குணவர்த்தன, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, ராஜாங்க அமைச்சர் அஜித் கப்ரால், இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோர் உள்ளார்கள். ஜனாதிபதி செயலாளர் பீ.பி. ஜயசுந்தர இந்த குழுவின் செயலாளராக குழுவை கூட்டுகிறார். இங்கேதான் விலையேற்றங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. ஆகவே இந்த குழுதான் ராஜினாமா செய்ய வேண்டும் அல்லது அனைத்துக்கும் பொறுப்பேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ராஜிநாமா செய்ய வேண்டும்.

அமைச்சர் உதய கம்மன்பில, அரசில் உள்ள சிறுகட்சி அமைச்சர். இது ஏதோ வீடு தீப்பற்றிய தற்கு, வீட்டில் வளர்க்கும் கூண்டுக்கிளியை பலிக்கடா ஆக்குவதாக தெரிகிறது. உதய எனது தனிப்பட்ட நண்பர்தான். அவரையிட்டு நான் கவலையடைகிறேன். ஆனாலும், காலமெல்லாம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக விஷம் கக்கி வந்த உதய கம்மன்பிலவின் இன்றைய கதியை நினைத்து அரசியல்ரீதியாக கவலைப்பட எமக்கு காரணம் ஏதுமில்லை.

இதற்கு முன்னால், இதேமாதிரி காலமெல்லாம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக விஷம் கக்கி வந்து, இப்போது அரசு தலைமையின் கோபத்துக்கு ஆளாகி, அதனால் வாயை மூடிக் கொண்டு இருக்கும் அமைச்சர் விமல் வீரவன்சவின் கதியே இன்று, அமைச்சர் உதய கம்மன்பிலவிற்கு ஏற்பட்டுள்ளது. இதைதான் அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் என்று சொல்வார்களோ?" என மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு ஆடை ஆலை தொழிலாளர்க்கு தடுப்பூசி!

மட்டக்களப்பு, ஜூன் 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆடைத்தொழிற்சாலைகளில் தொழில் புரிவோருக்கு சினோபார்ம் தடுப்பூசிகள் நேற்று ஏற்றப்பட்டன.

ஊறணியில் அமெரிக்க மிஷன் மண்டபத்தில் இந்த தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரனின் நெறிப்படுத்தலில் மட்டக்களப்பு சுகாதார அதிகாரி மருத்துவர் கே.கிரிசுதனின் வழிகாட்டலில் இந்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்றையதினம் சுமார் 600 இற்கும் மேற்பட்ட ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ)

# 2,031 பேர் குணமடைவு

கொழும்பு, ஜூன் 14

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த மேலும் 2,031 பேர் நேற்று பூரண குணமடைந்து வீடு திரும்பினர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 547 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

## புலனாய்வு பிரிவின்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தபோதிலும், சமூக ஊடகங்கள் வாயிலாக முன்னெடுக்கப்படுகின்ற சமூகவிரோத செயல்பாடுகள் குறித்து உரிய சட்டதிட்டங்களின் அடிப்படையில் தடுத்து நிறுத்துவதைவிடுத்து, குற்றவாளிகளை நோட்டமிட்டு புலனாய்வு செய்வதுபோல பொலிஸாரைப் பயன்படுத்த முன்வருவது, ஊடகத்துறையை இரும்புக் கரம்கொண்டு அச்சுறுத்தும் நடவடிக்கையாகவே அமையமுடியும்.

ஆகவே, சமூக ஊடகத்துறை அதுசார்ந்த சமூகவலை தளங்களை ஊடக தர்மத்தின் அடிப்படையிலும் உரிய நெறிப்படுத்தல்களின் அடிப்படையிலும் கையாளவேண்டுமே தவிர, புலனாய்வு மற்றும் கண்காணிப்பு என்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது சமூக ஊடகத்துறையை நேர்த்தியான ஊடக வழிமுறைகளின் அடிப்படையில் கையாளுகின்ற ஊடகத் துறை சார்ந்தோரும் பாதிக்கப்பட நேரிடும்.

இதுவிடயத்தில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது கண்டனத்தை வெளியிட்டிருப்பது ஒரு காலமறிந்த நடவடிக்கையாகவே இருக்கின்றது.

ஈழநாடு
Eelanadu
14.06.2021திங்கட்கிழமை
பிலவ வருடம், வைகாசி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# மீண்டும் அரசாங்கத்திற்குள் குழப்பமா?

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலகவேண்டுமென்று, ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவின அறிவித்திருக்கின்றது. இந்த அறிவிப்பில், கடசியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் கையெழுத்திட்டிருக்கின்றார். கொரோனா பெருந்தொற்றின் தாக்கத்தினால், தற்காலிகமாக பின்னுக்குச் சென்றிருந்த அரசாங்கத்தின் உள் முரண்பாடுகள் மீளவும் பேசுபொருளாகியிருக்கின்றன.

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அமைச்சர் உதய கம்மன்பில, பதவி விலகவேண்டுமென்று, பொதுஜன பெரமுன கோரியிருக்கின்றது. ஆனால், நிலைமைகளை அவதானித்தால், இது எரிபொருள் விலையேற்றம் தொடர்பான விவகாரம்போல் தெரியவில்லை.

உதய கம்மன்பில மற்றம் விமல் வீரவன்ச ஆகியோர் தொடர்பில் ஏற்கனவே பொதுஜன பெரமுனவிற்குள் கடுமையான அதிருப்தி நிலவுகின்றது. பொரும்பாலான பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில், உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோருக்கு எதிரான நிலைப்பாடு காணப்படுகின்றது. இதன் விளைவாகவே இவ்வாறானதோர் அறிவிப்பு தற்போது வெளியாகியிருக்கின்றது. பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அனுமதியின்றி இவ்வாறானதோர் அறிவிப்பை வழங்கியிருக்கமுடியுமா?

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடனேயே எரிபொருள் விலையேற்றம் தொடர்பான முடிவை எடுத்ததாக கம்மன்பில தெரிவித்திருக்கின்றார். கம்மன்பிலவின் கருத்துப்படி, எரிபொருள் விலையேற்றத்திற்கு மஹிந்த ராஜபக்ஷவே காரணம்.

உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ச ஆகியோர் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிற்கு நெருக்கமானவர்கள் என்னும் பார்வை உண்டு. பொதுஜன பெரமுனவின் தலைவராக ஜனாதிபதியை நியமிக்கவேண்டும் என்னும் கருத்தை முதல்முதலாக விமல் வீரவன்சவே முன்வைத்திருந்தார். இதனைத் தொடர்ந்தே பொதுஜன பெரமுனவிற்குள் சலசலப்புகள் ஏற்பட்டன. இதன் பின்னர் கட்சிக்குள் விமல் வீரவன்சவின் குரல் வலுவிழந்தது. ஆவேசமான பேச்சுக்களுக்கு பேர் போன விமல் வீரசவன்சவின் குரலை இப்போது அதிகம் கேட்கமுடிவதில்லை.

பொதுஜன பெரமுனவிற்குள் ஒரு பனிப் போர் இடம்பெற்றுவருவதான ஓர் அவதானம் உண்டு. ஆனால், இது எந்தளவிற்கு சிக்கலானது என்பதுபற்றிய தகவல்கள் இல்லை. என்னதான் முரண்பாடுகள் இருந்தாலும்கூட, அதிகாரத்தை இழந்துபோவதை ராஜபக்ஷக்கள் விரும்பப் போவதில்லை. எனவே, முடிந்தவரையில் விடயங்களை சமாளித்துச் செல்லவே முயற்சிப்பர்.

20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரங்கள் பெருமளவு குறைக்கப்பட்டுவிட்டன. ஆனால், இப்போதும் பொதுஜன பெரமுனவின் சக்திவாய்ந்த ஒரு தலைவராக அவரே இருக்கின்றார். இந்த நிலையில், பொதுஜன பெரமுனவிற்குள் ஓர் அதிகார இழுபறி இருப்பதான தோற்றமே தெரிகின்றது. பிரதமரின் அறிவிப்புக்கள், ஜனாதிபதியினால் இரத்துச்செய்யப்படும் நிலைமைகள் காணப்படுகின்றன. அதேபோன்று, ஜனாதிபதியின் முடிவுகள் சிலவேளைகளில் அமைச்சரவையால் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போது அரசாங்கத்திற்குள் செல்வாக்குமிக்க அமைச்சரான உதய கம்மன்பிலவை பதவிவிலகுமாறு பொதுஜனபெரமுன அறிவித்திருக்கின்றது. ஆனால், கம்மன்பிலவோ, மஹிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடன்தான், தான் இதனை செய்தாரென தெரிவித்திருக்கின்றார். இதன்மூலம் எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு மஹிந்த ராஜபக்ஷவே காரணம் என்றவாறான அபிப்பிராயமே வெளியில் எட்டிப் பார்க்கின்றது.

# புலனாய்வு பிரிவின் கண்காணிப்புக்குள்ளாகும் சமூக ஊடகத்துறை!



- அலசுவது **இராஜதந்திரி** -

*ஊடகத்துறையில் குறிப்பாக, சமூக ஊடகத்துறை கையாளப்படுவது குறித்தும் கண்காணிக்க விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவொன்றை அமைக்க அரசு முன்வந்துள்ளமையை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெகுவாக கண்டித்துள்ளது.*

*ஊடகத்துறை, ஜனநாயக நாடொான்றில் ஒரு முக்கிய தூணாக இருக்கின்றது. இருந்தபோதிலும், ஜனநாயக நடைமுறைகள் இலங்கையில் நலிவடைந்த நிலையில் சென்றுகொண்டிருப்பதாக விமர்சனங்கள் நீண்டகாலமாக வெளிவந்துகொண்டிருக்கும் தறுவாயில், சமூக ஊடகத்துறையை கண்காணிக்க பொலிஸ் புலனாய்வுப் பிரிவொன்றை உருவாக்க முன்வந்திருப்பது அனைத்து ஊடகத்துறையையும் அச்சுறுத்தும் ஒரு நடவடிக்கையாகவே காணப்படுகின்றது.*

*இலங்கையில் ரிச்சார்ட் டி சொய்ஸா , தர்மரட்ணம் சிவராம், லசந்த விக்கிரமதுங்க, நிமலராஜன் , நடேசன் போன்றோர் கொலையுண்ட நிலையிலும், பத்திரிகையாளர் எக்னொலிகொட இன்றுவரை காணாமல் போயுள்ள நிலையிலும் ஊடகத்துறை இலங்கையில் பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளான நிலையே காணப்படுகின்றது. இத்தகைய பின்னணியில், சமூக வலைத்தளங்களையும் கண்காணிக்க பொலிஸ் புலனாய்வுப் பிரிவொன்று அமைக்கப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.*

**எடுப்பார் கைப்பிள்ளை**

*இதுகுறித்து இலங்கையில் உள்ள ஊடக நிறுவனங்களுக்கு ஆதரவளிக்கும் விதத்தில் , இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்வந்திருப்பது வரவேற்புக்குரியதாக இருப்பதோடு, ஜனநாயக விழுமியங்களுக்காக குரல் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.*

*ஊடக சுதந்திரம் என்பது ஜனநாயக நடைமுறையின் ஓர் அங்கமாக இருந்து வருகின்றது. இதில் சமூக ஊடகத்துறைகள் அண்மைக்காலங்களில் முக்கியத்துவம் பெற்றவையாக இருந்துவருகின்றன.*

*ஊடக தர்மத்தின் அடிநாதமாக இருப்பது மெய்ப்பொருள் காண்பதே. எந்தவொரு விடயத்தையும் உண்மையாக தருவதோடு, உண்மையை எழுதுவதே ஊடக தர்மமாகும்.*

*சமூக வலைதளங்களின் ஆக்கிரமிப்புக்கு முன்பதாக ஊடகத்துறை பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தனது பங்களிப்பை வழங்கி வந்திருந்தது. இருந்தபோதிலும், சமூகவலைதளங்கள் மூலமாக ஊடகத்துறையென்பது பெரிதும் 'எடுப்பார் கைப்பிள்ளையாக' மாற்றம் கண்டுள்ளதையே அவதானிக்க முடிகிறது.*

*சமூக ஊடகத்துறையென்பது ஒருபுறத்தே அரிதான பல தகவல்களை தருவதாக இருக்கின்றது. மறுபுறத்தே, சமூக ஊடகத்துறையை துஷ்பிரயோகம்செய்து தனிப்பட்ட காரணங்களுக்காக அதனை தவறாக கையாளும் நடவடிக்கைகளும் அதிகரித்து வருவதையும் அவதானிக்கமுடிகிறது.*

*இதுவிடயத்தில் ஒரு தனிநபரோ அல்லது ஒரு நிறுவனமோ சமூகவலைத்தளங்கள் ஊடாக பாதிப்புறாதிருப்பதை உறுதிசெய்ய வேண்டியது அவசியமானதாகின்றது.*

**'வீட்டுக்கு வீடு' ஊடகவியலாளர்கள்**

*சமூக ஊடகத்துறைமூலமாக தற்போது சிறியோர் முதல் பெரியோர்வரை, வீட்டுக்கு வீடு அனைவருமே ஊடகவியலாளர்களாக மாற்றமடைந்து, தமது விருப்பு, வெறுப்புகளை மனம்போன போக்கில் குறிப்பிட்டு வருகின்ற ஒரு நிலையே காணப்படுகின்றது. இதன்காரணமாக பலர் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்படும் சம்பவங்களும் அதிகரித்தே வருகின்றன.*

*இந்நிலையில், சமூக ஊடகத்துறை மற்றும் அதுசார்ந்த சமூக வலைத்தளங்கள் என்பவற்றுக்கு வழிகாட்டல்கள் மற்றும் நெறிமுறைகளென்பது வகுக்கப்படவேண்டியது அவசியமானதாகின்றது. இதுவிடயத்தில் ஊடகத்துறையினர், சட்டத்துறையினர் அரசதரப்பினரோடு இணைந்து நெறிமுறைகளை வகுக்கமுடியும். அவ்வாறு செயல் திட்டங்களை வகுத்து நெறிப்படுத்தும் பட்சத்தில் அவற்றை மீறுவோர்மீது பாதிக்கப்பட்டவர்கள் கொடுக்கும் முறைப்பாடுகளின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகளையும் முன்னெடுக்கமுடியும்.*

*இதைவிடுத்து, ஆட்சியதிகாரங்களில் இருப்போர் தான்தோன்றித்தனமாக சமூக ஊடகத்துறையையும் அதுசார்ந்த சமூக வலைத்தளங்களையும் புலனாய்வு பொலிஸார் மூலமாக அச்சுறுத்த முயல்வது ஊடகத்துறையை இரும்புக் கரம்கொண்டு முடக்க முயல்கின்ற ஓர் எதேச்சாதிகாரமான நடவடிக்கையாகவே இருக்கமுடியும்.*

*இதன்காரணமாகவே இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தின் சமூக ஊடகத்துறையை பொலிஸ் புலனாய்வுப்பிரிவினர் மூலமாக கண்காணிக்கும் நடைமுறையை வன்மையாகக் கண்டித்துள்ளது.*

**சமூக ஊடகத்துறை மூலமாக அரிய தகவல்கள்**

*பத்திரிகைத்துறை, வானொலி, தொலைக்காட்சி என்பவை கிடைத்தற்கரிய பல தகவல்களை சமூக ஊடகத்துறை வாயிலாகவும் தற்போது பதிவிறக்கம் செய்கின்ற நிலை காணப்படுகின்றது.*

*இவ்வகையில் சமூக ஊடகங்கள் பெரும்பாலும் சாதகமான மற்றும் அறிபூர்வமான விடயங்களை பகிர்ந்து கொண்டாலும், சில சமூகவிரோத சக்திகள் ஊடகத்துறையின் மாண்புக்கும் சுதந்திரத்திற்கும் ஊறுவிளைவிக்கும் வகையில் நடந்துகொள்கின்றன.*

*இத்தகைய நாகரிகமற்ற ஊடக செயற்பாடுகள் நிச்சயம் கண்டிக்கப்படவேண்டியவையாகவும் தடுத்துநிறுத்தப்படவேண்டியவையாகவும் இருக்கின்றன.* *(02ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜூன் - 14 திங்கட்கிழமை**
பிலவ வருடம் - வைகாசி 31
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : சதுர்த்தி



## இன்றைய ராசிபலன்

**14.06.2021**

**மேடம்**
மன இறுக்கம் தீரும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். குழந்தைகள் வாழ்வில் சாதனைத் திருப்பம் உண்டாகும். மேலதிகாரி உங்கள் விருப்பமறிந்து நடந்து கொள்வார்.

**இடபம்**
மதிப்பு உயரும். முயன்ற விஷயம் நல்லபடியாக நடைபெறும். பணியில் பொருளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். இத்தனை நாள் பணியிடத்தில் இருந்த குழப்பம் நீங்கும்.

**மிதுனம்**
தேங்கியிருந்த விஷயங்களை முனைந்து முடிப்பீர்கள். மின்சாரம் மற்றும் இயந்திரங்கள் பற்றி எச்சரிக்கை தேவை. வட்டிக்கு வாங்கியிருந்த கடன்களை அடைப்பீர்கள்.

**கடகம்**
மரியாதை கூடும். பிறரின் செயல் கோபத்தை தூண்டலாம். நிதானமாக செயல் படுவது நன்மையை தரும். திறமை கூடும்.வேண்டப்பட்டவரின் ஆரோக்கியம் மேம்படும். வீடு கட்டுவீர்கள்.

**சிம்மம்**
எந்த பிரச்னையையும் சமாளிக்கும் மனோ தைரியம் ஏற்படும். வசதியான வீட்டுக்கு மாற விரும்புவீர்கள். கடன்கள் மிகக் குறையும். சக பணியாளருடன் இருந்து வந்த மனத்தாபங்கள் நீங்கும்.

**கன்னி**
இதுவரை கஷ்டப்படுத்திய மேலதிகாரி மாற்றலாகிச் செல்வார். விரும்பிய இடமாற்றம் தாமதமாகும். கவலைகள் குறையும். பணிகளை சிரமப்பட்டு முயற்சியால் முடித்து காட்டுவீர்கள்.

**துலாம்**
கடந்த காலக் கவலைகள் திடீரென்று காணாமல் போகும். கொஞ்சம் சேமிக்க முடியும். கற்பனை பயங்களால் சிரமப்படுவீர்கள். உங்கள், உழைப்பை மற்றவருக்குப் பயன்படுத்துவீர்கள்.

**விருட்சிகம்**
அலுவலகப் பணிகளில் இருந்த இறுக்கமான சூழ்நிலை நீங்கும். எதிர்பார்த்துக் காத்திருந்த விஷயம் கைகூடும். பயம் நீங்கும். சவாலான விஷயங்களைச் சாதித்துப் பெருமிதம் அடைவீர்கள்.

**தனுசு**
எதிலும் கவனமாயிருங்கள்.. யாரையும் அதிகம் நம்ப வேண்டாம். அவசரப்படாமல் செயல்படுங்கள். வம்புப் பேச்சால் பிரச்னை வரலாம். மனப போராட்டங்கள் தீரும். நம்பிக்கை தளர வேண்டாம்.

**மகரம்**
தடைப்பட்ட வேலைகளை மிகவும் சிரமப்பட்டே முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடுதலாகும். சந்தேகம் உள்ள நபர்களை விலக்குவது நல்லது.

**கும்பம்**
கடினமாக உழைத்தே எதையும் சாதிக்க வேண்டி வரும். வாழ்க்கைத்துணைக்கு உங்களால் நன்மை ஏற்படும். உழைப்புக்கேற்ற ஊதியம் இல்லை என்ற குறை இருக்கும்.

**மீனம்**
பொது நல விஷயங்களில் ஈடுபடுவீர்கள். நிம்மதி வரும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். பயத்தை உதறுங்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள்.

# தனது மகனை சிறை மீட்க உலகின் அத்தனை கதவுகளையும் தட்டிவிட்டார் அற்புதம் அம்மாள்

## கமல்ஹாசன் வெளியிட்டுள்ள உருக்கமான ‘ருவிட்’ செய்தி

சென்னை, ஜூன் 14

தன்னுடைய மகனை சிறையிலிருந்து மீட்பதற்காக உலகின் அத்தனைக் கதவுகளையும் தட்டிவிட்டார் அற்புதம் அம்மாள் என மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் உருக்கமான செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விசாரணை என்ற பெயரில் பேரறிவாளன் அழைத்துச் செல்லப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இதை முன்னிட்டு பல்வேறு தரப்பினரும் அவரின் விடுதலைக்கு குரல் கொடுத்து வருகின்றனர்.



இந்நிலையில், அற்புதம்மாள் போராட்டம் குறித்து கமல்ஹாசனும் பதிவு செய்திருக்கிறார்.

அவரின் கண்ணீருக்கு ஒரு நியாயம் கிடைக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருக்கிறார்.

இது தொடர்பாக அவர் ருவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

“மகனை மீட்க உலகின் அத்தனைக் கதவுகளையும் தட்டி விட்டார் அற்புதம் அம்மாள். தன் உயிராற்றலின் ஒவ்வொரு துளியையும் அநீதியின் கொடுங்கரங்களில் சிக்கித் தவிக்கும் பேரறிவாளனின் விடுதலைக்கே செலவழித்த இந்த அற்புதத்தாயின் முப்பதாண்டு கண்ணீரை எப்போது துடைக்கப் போகிறோம்? என்று கமல்ஹாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

# மது கடைகளை திறக்க அனுமதிக்கக்கூடாது எதிர்த்து பா.ஜ.கவினர் நேற்று ஆர்ப்பாட்டம்




சென்னை, ஜூன் 14

தமிழகத்தில் ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்பட்டு, கொரோனா தொற்று குறைவாக உள்ள 27 மாவட்டங்களில் இன்று முதல் ‘டாஸ்மாக்’ எனப்படும் மதுக் கடைகள் செயல்பட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதற்கு பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

மதுக்கடைகள் நிரந்தரமாக மூடப்படவேண்டும் என தமிழக பா.ஜ.கவினர் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். சென்னையில் உள்ள பா.ஜ.க. தலைமையகமான கமலாலயத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாநில தலைவர் எல்.முருகன் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். மதுக் கடைகளை திறக்கக் கூடாது என்று வலியுறுத்தியும், அரசின் முடிவை கண்டித்தும் முழக்கம் எழுப்பினர். அத்துடன் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

# தூத்துக்குடியில் சிக்கிய பிரித்தானிய போதைப்பொருள் கடத்தல்காரர்!

## விசாரணையில் வெளிவரும் பரபரப்பு தகவல்கள்

சென்னை, ஜூன் 14

தமிழகத்தின் தூத்துக்குடி கடற்கரையிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு படகு மூலமாக வருவதற்கு முயன்ற பிரித்தானிய போதைப் பொருள் கடத்தல்காரர் கைது செய்யப்பட்டதையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் அவர் குறித்து பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளன.



பிரித்தானிய நாட்டை சேர்ந்த ஜோனதன் தோர்ன் (வயது 47) தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு சட்டவிரோதமாக படகில் வருவதற்காக, தூத்துக்குடி கடற்கரையில் சுற்றிக்கொண்டு இருந்த போது கியூபிரிவு பொலிஸாரால் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டார். தொடர்ந்து அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் 2 லட்சத்து 10 ஆயிரம் இந்திய ரூபாவையும், 2 ஆயிரம் ரூபாய் இலங்கை பணமும் வைத்திருந்தார். அவை அனைத்தையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

பொலிஸார் ஜோனதன் தோர்னிடம் நடத்திய விசாரணையில், அவர் பிடிபட்டது எப்படி? என்பது குறித்து பரபரப்பு தகவல்கள் வெளியாகி உள்ளன. இவர் ஏற்கனவே மும்பையில் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர். இந்த நிலையில் அவர் சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்பி செல்ல முயன்று உள்ளார்.

இதற்காக இலங்கையை சேர்ந்த ஒருவரை ஜோனதன் தோர்ன் தொடர்பு கொண்டார். அவர் தூத்துக்குடியை சேர்ந்த ஒருவரை தொடர்பு கொண்டு பேசி உள்ளார். அதற்கான விலையும் பேசி இருக்கிறார். இதைத்தொடர்ந்து ஜோனதன் தோர்ன் தூத்துக்குடியில் வந்து தங்கி உள்ளார். பின்னர் கடற்கரைக்கு சென்று காத்திருந்தபோது பொலிஸாரிடம் சிக்கி உள்ளார் என்பது தெரியவந்து உள்ளது.

மேலும் கியூ பிரிவு பொலிஸார் ஜோனதன் தோர்ன் தங்கி இருந்தபோது யாரேனும் அவரை சந்தித்து உள்ளார்களா? என்பதை அறிவதற்காக அந்த விடுதியில் உள்ள கண்காணிப்பு கமெராவில் பதிவாகி உள்ள காட்சிகளை ஆய்வு செய்து வருகின்றனர். தூத்துக்குடியில் யாரை தொடர்பு கொண்டு பேசி உள்ளார்? யாருடைய படகு மூலம் இலங்கைக்கு செல்ல முயன்றார்? என்பன உள்ளிட்ட விவரங்களையும் பொலிஸார் சேகரித்து வருகின்றனர்.

அவரது உயர்ரக கைபேசியை திறக்க முடியாததால், அதில் உள்ள தகவல்களை பெற முடியவில்லை. அந்த கைப்பேசியை திறப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

ரெலோ, புளொட் கட்சிகள்

# பாராளுமன்றத்தில் தனித்து இயங்க முடிவு?

கொழும்பு, ஜுன் 14

பாராளுமன்றத்தில் சுயாதீன மாக இயங்குவதற்கான நட வடிக்கைகளை அடுத்துவரும் நாட்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மற்றும் தமி ழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகியன முன்னெ டுத்துள்ளன என்று அறிய வரு கின்றது.

இதற்கான முதல் கட்டப் பேச்சுக்கள் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனுக் கும், புளொட் தலைவர் தரும லிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையில் இடம்பெற்றன என்று அந்தக் கட்சிகளின் உயர் மட்ட வட்டாரங்கள் மூலம் அறியவந்தது.

இந்த உரையாடலின் போது, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்றக் குழு வின் தலைவர் சம்பந்தன் சுகவீன விடுமுறையிலுள்ளார். இந்த நிலையில், அந்தப் பொறுப்பை பாராளு மன்ற உறுப்பினர் சுமந்திரனே ஏற்றுள் ளார்.

இதனிடையே, கூட்டமைப் பின் ஊடகப்பேச்சாளர் மற்றும் கொறடா பதவிகளை மாற்று வது தொடர்பில் சம்பந்தனு டன் ரெலோவும், புளொட்டும் கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டாலும்கூட அது செயல்வடிவம் பெறவில்லை.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறி தரன் கொறடா பதவியை இராஜினாமா செய்தார். இத னால், சுமந்திரன் எம்.பியின் கோரிக்கைக்கு அமைய அந்தப் பதவியை பாராளுமன்ற உறுப் பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் வகித்து வருகின்றார். இவர் இப் பதவியை பொறுப்பேற்ற பின் னரும் பங்காளிக் கட்சிகளுக் கான நேர ஒதுக்கீடு தொடர் பான பாரபட்சமான நிலைமை கள் நீடிக்கிறது என்று இரு கட்சிகளும் குற்றஞ்சாட்டுகின் றன.

இந்த நிலையிலேயே பாராளுமன்றில் தாம் தனித்து செயல்படுவது என்று எழுத்து மூலம் சபாநாயகருக்கு அறிவிக் கவும் இதனி மூலம் தனியான ஒதுக்கீடுகளை பெறவும் இந்தக் கட்சிகள் இணங்கியுள்ளன என்று கூறப்படுகின்றது. (ஐ)



# மக்கள் கூடும்வகையில் மீன்விற்ற 6 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜுன் 14

கொக்குவில் - குளப்பிட்டி சந்திக்கு அண்மையாக மீன் வியாபாரம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் ஆறு வியாபாரி களை யாழ்ப்பாணம் பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பய ணத் தடை நடைமுறையில் உள் ளது. இந்நிலையில், நடமாடும் வியாபாரத்துக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்களை ஒன்று கூட்டும் வகையில் வியாபாரத் தில் ஈடுபட்டனர் என்ற குற்றச் சாட்டில் அவர்கள் கைது செய் யப்பட்டுள்ளனர். அத்துடன், அவர்கள் வியாபாரத்துக்கென வைத்திருந்த மீன்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வியாபாரப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ள னர் என்று தெரிய வருகின்றது.

ஏற்கனவே, அப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடு பட வேண்டாம் என்று பொறுப் பான நல்லூர் பிரதேச சபை அறி வித்திருந்தது. இந்த நிலையி லேயே நேற்று இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன. (ஐ-3)

## கசிப்பு காய்ச்சியவர் முல்லைதீவில் கைது!

முல்லைத்தீவு, ஜுன் 14

சூட்சுமமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஒருவரை தாம் கைது செய் தனர் என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

மாந்தை கிழக்கு கரும்புள்ளி யான் பகுதியை சேர்ந்த 43 வய தான ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் கைது செய்யப்பட் டார் என்று பொலிஸார் தெரி வித்தனர்.

கைதானவரிடம் இருந்து கசிப்பு காய்ச்சுவதற்கு பயன் படும் கோடா, ஸ்பிறிட் 2 லீற் றர் என்பன கைப்பற்றப்பட்டுள் ளன என்றும் தெரிவிக்கப்பட் டது. (ஐ)



# கிளிநொச்சி வயல்களில் சட்டவிரோத மணல் அகழ்வு!

தடுத்து நிறுத்துமாறு பொலிஸூக்கு கடிதம்

கிளிநொச்சி, ஜுன் 14

கிளிநொச்சியில் வயல் நிலங்களில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வு களை தடுத்து நிறுத்த நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை செய்யத் தவறும் பட்சத்தில் அப்பகுதியில் நிரந் தரமாக விவசாயத்தை இழக்கும் நிலை ஏற்படும் என்று உருத்திர புரம் - நீவில் கமக்கார அமைப்பு கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

கடந்த 02 ஆம் திகதி எழுதப் பட்ட அந்தக் கடிதத்தில், "நீவில் கமக்கார அமைப்பிற் குட்பட்ட தனியார் வயல் நிலங்களில் சட்டவிரோதமாக மணல் அகழப்பட்டு, உழவு இயந்திரங்கள், டிப்பர் வாகனங் கள் மூலம் கொண்டு செல்லப் படுகின்றன. இது தொடர்பில் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அறிவித்தும் அதனை தடுக்க எந்த நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வின் மூலம் எடுத் துச் செல்லப்படும் மணல் உருத் திரபும் வீதி ஊடாக பரந்தன் - பூநகரி வீதியால் யாழ்ப்பா ணத்திற்கும் மற்றும் கிளிநொச் சியின் ஏனைய பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

எனவே, எங்களின் விவசாய நிலங்களை பாதுகாக்க உரிய நட வடிக்கையை விரைந்து மேற் கொள்ள வேண்டும் என்று அவர் கள் கோரிக்கை விடுத்துள்ள னர். இந்தக் கடிதத்தின் பிரதியை கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கும் பிரதியிட்டுள் ளனர். (ஐ)

# கடும் காற்று, மழையால் 17 குடும்பங்கள் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜுன் 14

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு திடீரென வீசிய கடும் காற்று மற்றும் மழையால் 17 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் என்.சூரிய ராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் 10 மணி வரை கடும் காற்று வீசியதுடன் பெருமழையும் பெய்தது. இதன் தாக்கத்தால் 17 வீடுகள் பகுதியளவில் சேத மடைந்தன. அத்துடன், மூன்று சிறு தொழில் முயற்சியாளர் களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பாதிப்புக்கள் தொடர்பான விவரங்கள் பிர தேச செயலகங்கள் ஊடாக சேகரிக்கப்பட்டு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு ஊடாக சேதிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலை யத்துக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

## பாணுக்குள் மூடி வெதுப்பகம் மீது வழக்கு தாக்கல்!



வவுனியா, ஜுன் 14

பாணுக்குள் போத்தல் மூடி காணப்பட்டதையடுத்து அதைத் தயாரித்த வெதுப்பகத் துக்கு எதிராக சுகாதார பிரிவு வழக்கு தொடுத்துள்ளது.

நேற்று முன்தினம் நட மாடும் சேவை மூலம் வவுனியா பட்டக்காடு பகுதியில் பாண் விற்பனை செய்யப்பட்டது. பாணை வாங்கிய ஒருவர் அதில் போத்தல் மூடி காணப் பட்டதை கண்டு சுகாதா ரப் பிரிவினருக்கு முறைப்பாடு அளித்தார்.

அவரின் முறைப்பாட்டை ஏற்ற சுகாதார பகுதியினர், சுகாதாரமற்ற முறையில் அதைத் தயாரித்த வெதுப்பகம் மீது வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். (ஐ)

# மறவன்புலவு மக்களுக்கு நிவாரண பொதி வழங்கல்!




யாழ்ப்பாணம், ஜுன் 14

கொரோனா தொற்று தாக்கத்தால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி - மறவன்புலவு கிழக்கு கிராம மக்களுக்கு நிவா ரணப் பொதிகள் வழங்கப்பட் டன.

அமரர் நமசிவாயம் வல்லி புரநாதனின் ஓராண்டு நினை வாக அவரின் குடும்பத்தவர்கள் இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர். அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை, சவர்க் காரம் சலவைத்தூள் உள்ளடங் கிய ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான நூறு நிவார ணப் பொதிகள் வழங்கப்பட் டன.

மறவன்புலவு பொதுநோக்கு மண்டபம் முன்றலில் நேற்று காலை இடம்பெற்ற இந்த நிகழ் வில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராஜ பக்ஷ, 12 ஆவது படைப் பிரிவின் அதிகாரி லெப்டி னன்ட் உதயங்க, அமரர் நம சிவாயம் வல்லிபுரநாதனின் குடும்பத்தவர்கள் இதில் பங் கேற்றனர். (ஐ-3)

# கிளிநொச்சியில் சூதாட்டம்: 14 பேர் நேற்று கைதாகினர்!

4 இலட்சம் ரூபாயும் பறிமுதல்

கிளிநொச்சி, ஜுன் 14

கிளிநொச்சி மருதநகரில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 14 பேரை தாம் கைது செய்துள்ள னர் என்றும், அவர்களிடம் இருந்து 4 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாயும் கைப்பற்றப் பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றது. கிநொச்சி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய இந்தக் கைது இடம் பெற்றது.

இதேவேளை, சந்தேக நபர் களுக்கு எதிராக பயணக்கட்டுப் பாடுகளை மீறிய குற்றச்சாட் டின் கீழும் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சுகாதார நிபுணர்களுக்கு இராணுவம் இடையூறல்ல!

## குற்றச்சாட்டுகளை நிராகரிக்கிறார் தளபதி

**கொழும்பு, ஜூன் 14**

**கோவிட்-19 கட்டுப்பாட்டு பணிகளில் சுகாதார நிபுணர்களுக்கு இராணுவம் இடையூறாக உள்ளன என்று வெளியாகும் குற்றச்சாட்டுக்களை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நிராகரித்துள்ளார்.**



சுகாதாரத் துறையினருக்கு ஏற்பட்டுள்ள அதிக சுமைகளைக் குறைக்கவும் சுகாதார நிபுணர்களுக்கு உதவும் பணகளிலுமே இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோவிட் -19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தின் கூட்டம் செயல்பாட்டு மைய தலைவரும் இராணுவ தளபதியுமான சவேந்திர சில்வா மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேலா குணவர்த்தன ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போதே, கோவிட் 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இராணுவம் சுகாதார நிபுணர்களுக்கு எந்த வகையிலும் இடையூறு விளைவிக்கவில்லை என்று சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரிலேயே சுகாதார வல்லுநர்களுக்கு உதவ முன்களத்தில் இராணுவத்தினர் பணியாற்றி வருகின்றனர். அவர்களிடம் உள்ள இராணுவத் திறன், தொழில்முறை திறன்களை நன்கு அறிந்தவர் என்ற வகையில் ஜனாதிபதி படையினரை பணிக்கு அமர்த்தியுள்ளார்.

இதனை சுகாதார வல்லுநர்களின் தொழில்முறைசார் பணிகளில் குறுக்கீடு செய்வதாக தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது - என்றும் அவர் மேலும் சொன்னார். (ஐ)

# 5,000 ரூபாய் கொடுப்பனவு மீனவர்களுக்கு இன்றுமுதல்!



கொழும்பு, ஜூன் 14

எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு இன்று திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விபத்திற்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்களால் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ள பாணதுறை முதல் நீர்கொழும்பு வரையான கடற்பகுதியில் முறையான ஆய்விற்கு பின்னர் விரைவாக மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேற்று முன்தினம் பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

இதன்போதே இந்த கொடுப்பனவு தொடர்பாக பிரதமர் அறிவித்தார்.

கப்பல் விபத்துக்குள்ளானதால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து முழுமையாக மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. இழப்பீட்டை பெறுவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு பிரதமர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பணிப்புரை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பசியால் பப்பாசி காயை அவித்து உண்ணும் மக்கள்!

## அநுராதபுரத்தில் பெரும் துயரம்

அநுராதபுரம், ஜூன் 14

பயணத் தடை தொடர்வதால் தொழில் வாய்ப்பு இன்மையாலும், உணவு கிடைக்காமையாலும் பப்பாசிக் காயை அவித்து உண்ணும் கிராமம் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தின் கல்நேவ பிரதேசத்தின் அவுக்கனை (அலிவங்குவ) கிரா மத்தை சேர்ந்த 49 குடும்பங்களே இவ்வாறு பப்பாசிக் காயை அவித்து உண்கின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

தொற்று நெருக்கடி காலத்தில் அரசாங்கம் பல்வேறு நிவா ரண திட்டங்களை அறிவித்து வழங்குகின்ற போதிலும் அவை எதுவும் இந்தப் பகுதி மக்களுக்கு கிடைக்கவில்லை என்று அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளிலும் யாசகத்தில் ஈடுபட்ட குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் குடியேற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து அவர்கள் யாசகத்தை கைவிட்டு சுய தொழில்களில் ஈடுபட்டு வரு கின்றனர்.

தேங்காய் பிடுங்குதல், பழைய இரும்புகளை சேகரிப்பது, தேங்காய் சிரட்டைகளை சேகரிப்பது, பஸ்களில் புத்தகங்கள் விற்பது போன்ற தொழில்களை செய்து அவர்கள் வாழ்வாதாரத்தை பெற்று வந்தனர்.

தொற்று நெருக்கடியால், இந்தக் கிராம மக்கள் தொழில் வாய்ப்புகளை இழந்துள்ளனர். அயல்கிராம மக்களால் ஒதுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வரும் தாங்கள் அபிவிருத்திகளிலும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், கொரோனா பேரிடரால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள னர்என்று தெரிவித்துள்ளனர்.

உணவு இன்மையால், ஒரு வேளை உணவாக தேநீர், பிஸ்கெற்றும், அவித்த மரவள்ளி கிழங்கு அல்லது பப்பாசி காய்களை வேகவைத்து உப்புடன் சேர்த்து உண்பதாகக் கூறுகின்றனர். தங்களின் பிள்ளைகளின் பசியை போக்கவாவது உதவுமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், கல்நேவ பிரதேச செயலாளரான லக்மலி சேனாதீரவிடம் வினவியபோது,

“கல்நேவ பிரசெயலகத்துக்குட்பட்ட அலிவங்குவ கிராமத்தில் 49 குடும்பங்கள் வசிக்கின்றனர். 8 ஆண்டுகளுக்கு முன்னர் இங்குள்ள ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 20 பேர்ச்சர்ஸ் காணி வழங்கப்பட்டு அவர்களை அந்த கிராமத்தில் குடியமர்த்தப்பட்டனர். அவர்களுக்கு வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தலால் அப்பகுதி மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். இவர்களில் 3 குடும்பங்களுக்கு சமுர்த்தி கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. ஏனைய 46 குடும்பங்களும் காத்திருப்பு பட்டியலில் உள்ளனர்.

சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அங்கே பொது நீர் வழங்கல் வசதி இதுவரை நிர்மாணிக்கப்படவில்லை. அந்த கிராமத்திலுள்ள மக்கள் பக்கத்திலுள்ள கிராமத்திலுள்ள தனிநபர் ஒருவருக்கு உரித்தான கிணற்றிலிருந்தே அலிவங்குவ கிராம மக்கள் குடிநீர் பெற்று வந்தனர். எனினும், அலிவங்குவ கிராமத்திலுள்ள 4 பேருக்கு கொரோனா வைரஸ் ஏற்பட்டதால் குறித்த கிணற்றின் உரிமையாளர் நீரை பெறுவதற்கு அனுமதி மறுத்துள்ளார். இந் நிலையில், தேசிய நீர்வழங்கல் அதிகார சபையுடன் இணைந்து அலிவங்குவ கிராமத்து மக்க ளுக்கு தண்ணீர் தாங்கிகள் அனுப்பப்பட்டுவருகின்றன” என்றார்.(ஐ)

# ஜி.எஸ்.பி. வரி சலுகை இரத்தானால் மீனவர் சமூகத்துக்கே அதிக பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஜி. எஸ் பிளஸ்வரிச்சலுகையை நீக்க வேண்டும் என்ற ஐரோப்பிய பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றியுள்ளது. இது விரைவில் நடைமுறைக்கு வரும். அவ்வாறு வரும்போது பெரியளவில் பாதிக்கப்படப்போவது மீன் ஏற்றுமதியே என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் கூறியுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை நீக்க வேண்டும் என்ற பிரேரணையை ஐரோப்பிய பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. 2015 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச் சட்டம் அகற்றப்படுகின்றது என்ற வாக்குறுதியின் பெயரி



லேயே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மீள வழங்கப்பட்டிருந்தது. இப்போது நான்கு ஆண்டுகள் கடந்தும் பயங்கரவாத தடுப்புச்சட்டம் நீக்கப்படாத காரணத்தினால் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை தடை செய்யுமாறு கூறியுள்ளனர். அது விரைவில் நடைமுறைக்கு வரும். இதனால் பெரியளவில் பாதிக்கப்படப்போவதும் மீன் ஏற்றுமதியே.

டக்ளஸ் தேவானந்தா நாட்டின் மீன்பிடித் துறை அமைச்சராக செயல்பட வேண்டும். நாட்டின் எந்தப்பகுதியில் மீனவர்களுக்கு இடர் ஏற்பட்டாலும் அவர் அதனை கவனிக்க வேண்டும். அதனை விடுத்து கப்பல் பிரச்னை வந்திருப்பதன் காரணமாக வட, கிழக்கு மீனவர்கள் வருவாயை கூட்டிக் கொள்ளலாம் என அவர் கூறுவது பொறுப்பற்ற கூற்றாகும்.

அதுமட்டுமல்லாது எதிர்காலத்தில் வட, கிழக்கு மீனவர்களையும் இது பாதிக்கும் வித்தல் அமையலாம். ஏனைய இடங்களில் தொழில் செய்ய முடியாதவர்கள் இங்கு வருவதற்கான நிலை உருவாகும். அதனை அவரே கொண்டுவந்து நிறுத்திவிடுவார். ஆகவே, மீன்பிடித்துறை அமைச்சர் தமிழ் மக்களுக்கான அமைச்சர் என சொல்லிக்காட்டுவதும், அவ்வாறான ஒரு பிம்பத்தை ஏற்படுத்துவதும் தவறான ஒரு விடயமாகும் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

# மக்களுக்கு சிக்கலை ஏற்படுத்தாது பொறுப்புடன் செயல்படவேண்டும்

## அரசை கோருகிறது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 14,

“கோவிட் -19 கொரோனா வைரஸ் தொற்றானது, இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவரான இராணுவத் தளபதியின் முடிகளையும் அறிவிப்புகளையும் மீறி வேகமாகப் பரவி வருகிறது. தொற்று மரணங்கள் 2 ஆயிரத்தைத் தாண்டியுள்ளன. ஒன்றுபட்டு தீர்மானங்களையும் முடிவுகளையும் எடுக்க வேண்டியவர்களான ஆளும் தரப்பினரும் சுகாதாரத் துறையினரும் ஆளுக்காள் போட்டிபோட்டுக்கொண்டு, முன்னுக்குப் பின் முரணான புள்ளி விபரங்களையும் அறிவிப்புகளையும் வெளியிட்டு, மக்களை அச்சுறுத்தியும் அவலப்படுத்தியும் வருகின்றனர்.

கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்தவோ தடுக்கவோ முடியாதவர்களாக இவர்கள் உள்ளனர்” எனப் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி. கா. செந்திவேல் வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், “நாட்டு மக்களுக்குத் தேவையான தடுப்பூசிகளைப் பெறவோ, அவற்றைப் பாகுபாடின்றி அனைத்துப் பிரதேச மக்களுக்கும் விநியோகித்துப் பயன்படுத்தவோ முடியாத கையறு நிலையிலேயே ஆட்சியாளர்கள் இருந்து வருகின்றனர்.

ஆனால், கொரோனாத் தொற்றின் மறைவில், ஆட்சியில் இருப்போர் தமக்குத் தேவையானவற்றை அரசியல் ரீதியாகவும் பொருளாதார அடிப்படையில் மக்களுக்கு விரோதமாக முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் அன்றாட உணவுப் பொருட்களினதும் அத்தியாவசியப் பாவனைப் பொருட்களினதும் விலைகள் தாறுமாறாக உயர்த்தப்பட்டுள்ளன. அவற்றில் மேலும் விலை உயர்வுகளை ஏற்படுத்தும் வகையில், அரசினால் எரிபொருள் விலை அதிகரிப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு மக்களை வாட்டி வதைக்கும் இன்றைய ஆட்சியாளர்களான ராஜபக்ஷ சகோதரர்கள், முதலாளிகள், உயர் வர்க்கத்தினர் மற்றும் வசதி படைத்தவர்களுக்கு ஏற்றவாறு தீர்மானங்களையும் முடிவுகளையும் மேற்கொண்டு வருகின்றனர். - என்றுள்ளது.

# கூட்டமைப்புக்குள் பிரச்னைகள் உள்ளன; அதற்காக வெளியேறும் எண்ணம் இல்லை

## கூட்டுக்குள் இருந்தே செயல்படுவோம் என்கிறார் செல்வம்

மன்னார், ஜூன் 14

"தமிழ் தேசியக்கூட்டமைப்பில் இருந்து பங்காளிக்கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் 'ரெலோ' வெளியில் வந்து செயல்படுவதற்கான நிலை தற்போது வரை இல்லை. சில பிரச்னைகள் கட்சிக்குள் உள்ளன. அதனை நிவர்த்தி செய்து கொண்டு கூட்டுக்குள் இருந்து கொண்டு செயல்படுவோம்" என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,ரெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது இதனை அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் முக்கியமாகக் கூறியவை வருமாறு:

"தற்போதைய அரசாங்கம் வருட இறுதிக்குள் பாரிய நிதி நெருக்கடிக்குள் தள்ளப்படும்சூழ் நிலையில்காணப்படுகின்றது. அதற்கான முதல் படி எரிபொருட்களின் விலையேற்றம். மிகவும் மோசமான ஒரு சூழல் இந்த நாட்டில் இருக்கின்ற நிலையில் எரிபொருளை வறிய மக்கள் பயண்படுத்துகின்ற மண்ணெண்ணெய் 7 ரூபாவினால் அதி கரிக்கப்பட்டுள்ளது.

இதனால் சாதாரண மக்கள் கடற்தொழிலாளர்கள், விவசாயிகள் அன்றாட கூலித் தொழிலாளர்கள் ஆகியோர் பெரும் பிரச்னைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கம் தன்னை நியாயப்படுத்த கூறுகின்ற காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில் மக்களும் முடக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இவ்வாறான ஒரு அபாயச் செய்தியான எரிபொருட்களின் விலையேற்றம் செய்யப்பட்டமையை வன்மையாக கண்டிக்கின்றோம். எரிபொருட்கள் மட்டும் இல்லை.ஏனைய அத்தியாவசியப் பொருட்களும் விலை அதிகரிப்புச் செய்யப்படுவதற்கான காரணமாகவும் உள்ளது. பாண் உற்பட அனைத்துப் பொருட்களின் விலையும் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். எனவே இந்த அரசாங்கம் மக்கள் தொடர்பில் சிந்திக்கின்ற அரசாங்கமாக செயல் படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அந்த வகையில் இலங்கை அரசாங்கம் உடனடியாக விலையேற்றங்களை குறைக்க வேண்டும். நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு நல்ல செய்தியை விலை குறைப்பின் ஊடாக சொல்ல வேண்டும். இல்லை என்றால் நான் கூறியது போல் இவ் வருட இறுதிக்குள் பெரும் நிதி நெருக்கடிக்குள் தள்ளப்படும்.என தெரிவித்தார்.

### மீனவர் பிரச்னை

மேலும், சனிக்கிழமை பிரதமர் தலைமையில் கப்பல் தொடர்பாக ஒரு அவசர கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. குறித்த கலந்துரையாடலை பார்க்கின்ற போது குறித்த கப்பலை நாட்டிற்குள் எடுத்ததிற்கான நியாயப்பாட்டினை தெரிவிக்கின்ற வகையிலே குறித்த கூட்டம் அமைந்துள்ளது. ஆனால், கப்பல் உள்ளே எடுக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்டவர்கள் மக்கள் மற்றும் மீனவ சமூகம். மீனவ சமூகம் பெரும் பின்னடைவை சந்திக்கப் போகின்றார்கள் என்பது உண்மை. மன்னார் வளைகுடாவில்கூட கப்பலின் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் பிடிக்கப்படுகின்ற மீன் வகைகள் சர்வதேச ரீதியாக ஏற்றுமதி செய்யப்படுகின்ற போது அவை திருப்பி அனுப்பப்படுகின்ற நிலை ஏற்படுமா? ஏன்ற நிலையில் எமது மீனவ சமூகம் ஓர் அச்சத்துடன் இருக்கின்றது. விலை உயர்ந்த மீன் வகைகளை அவர்கள் நல்ல விலைக்கு கொடுத்து அவர்களின் வாழ்வாதாரம் உயர்வடைகின்ற நிலையினை அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

நிதியை பெற்றுக் கொள்ளவே கப்பலை உள்ளே எடுத்ததாக வாசுதேவ நாணயக்கர தெரிவித்துள்ளார். அரசாங்கம் பல தடவைகள் பணம் சம்பாதிக்கின்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் எமது மக்களை பலிக்காடாவாக்கும் நிலையை இந்த அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நாடு முழுவதும் அமுல் படுத்தப்பட்டுள்ள பயணத்தடையானது நாட்டில் இருந்து கொரோனா தொற்றை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதற்காகவே நாடு முழுமையாக முடக்கப்பட்டது. ஆனால், நாடு முடக்கப்பட்டமைக்கான நோக்கம் வெற்றி பெற்றதாக இல்லை. காரணம் தொற்றாளர்களினதும்,மரணிப்பவர்களினதும் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. எனவே, இந்த நாட்டை முடக்குகின்ற நிலமை தொடர்ந்து கொண்டுள்ள நிலையில் மக்கள் தான் பாதிக்கப்படுகின்றார்கள்.

### தடுப்பூசி அவசியம்

வைரஸின் தாக்கம் கூடிக் கொண்டிருக்கின்றது. இதற்கு முதல் காரணம் என்னவென்றால்அனைத்து மக்களும்ஆதரவு வழங்க வேண்டும் என்றால் முதலில் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட வேண்டும். உலக நாடுகளும் அதனையே செய்கின்றது. ஆனால், நாட்டை முடக்கி விட்டு தடுப்பூசி வழங்க வில்லை என்றால் இறப்பு அதிகரிக்கும்,தொற்றும் அதிகரிக்கும்.எனவே இவற்றை தடுக்க வேண்டும் என்றால் கொரோனா தடுப்பூசிகள் மக்களுக்கு செலுத்தப்பட வேண்டும்.

வன்னி மாவட்டத்தில் மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்குவதற்கான உரிய வழி முறைகளை அரசு கண்டு கொள்ளவில்லை. யாழ்ப்பாணத்தில் அதிக அளவில் தொற்றாளர்கள் உள்ளனர். அங்கே தடுப்பூசிகள் போடப்பட வேண்டும். வன்னி மாவட்டம் குறிப்பாக முல்லைத்தீவிலும் கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆடைத் தொழிற்சாலையினால் பல பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன. ஆடைத் தொழிற்சாலை தொடர்ந்தும் இயங்கிக் கொண்டு இருக்கின்றது. ஆடைத் தொழிற்சாலையினாலேயே கொரோனா தொற்று பரவிக் கொண்டிருக்கின்றது.



மேலும் ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றுகின்றவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை அரச செலவில் மேற்கொள்ளப்படுவதாக அறிகின்றோம். அவ்வாறு செய்யாமல் அரசினால் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனை சமூகத்திலும், மக்கள் மத்தியிலும் முழுமையாக சென்றடைய வேண்டும். ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் தனிப்பட்ட முறையில் பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்க வேண்டும்.

### ரெலோ வெளியேறாது

கூட்டமைப்பிற்குள் சில பிரச்னைகள் உள்ளன அதனை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம். தமிழ் தேசியக்கூட்டமையில் இருந்து தமிழீழ விடுதலை இயக்கம் வெளியில் வந்து செயல் படுவதற்கான எண்ணம் தற்போது வரை இல்லை. சில பிரச்னைகள் உள்ளன. அதனை தெரியப்படுத்தி உள்ளோம். உள்ளே இருந்து கொண்டு செயல் படுவோம். ஆனால், தற்போதைய கால சூழ்நிலை யில் வெளியில் வந்து செயற்படும் நிலை ஏற்படாது.

மக்களை நேசிக்கின்ற கட்சிகளை ஒன்றிணைத்து மக்கள் முகங்கொடுக்கும் பிரச்னைகளை தீர்த்து வைக்க நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். கட்சிகளை ஒன்றிணைத்து குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

---





# முடக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு யாழ்ப்பாணம் இந்து கல்லூரி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 14

இலங்கையிலுள்ள புகழ்பூத்த தமிழ்ப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொரோனா மூன்றாவது அலை காரணமாக நாட்டில் தற்போது எழுந்துள்ள முடக்கல் நிலையால் அன்றாட சீவனோபாயத்தை இழந்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ள உறவுகளுக்கு உதவும் வகையில் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் பெரும் உதவித் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது.

கல்லூரியின் நிர்வாகமும், இலங்கை உட்பட உலகின் பல நாடுகளில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்கள் உள்ளிட்ட யாழ்.இந்துக் கல்லூரி ஒட்டுமொத்த சமூகமும் பெரும் எண்ணிக்கையில் ஒன்றிணைந்து இதற்குத் தேவையான நிதியை தம்மிடையே திரட்டி இந்த தக்கதருணத்தில் தேவைப்பட்ட பெரும் உதவியை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் கடந்த வாரத்தில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு கட்ட பணிகள் மூலமாக இதுவரையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உலர் உணவுப் பொதிகளைப் பெற்றுப் பயனடைந்தனர். அத்துடன்இத்திட்டம்திருகோணமலை மற்றும் தமிழ் பேசும் சமூகங்கள் வாழ்கின்ற நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் முன்னெடுக்கப்படுவதற்கான ஏற்பாடுகளின் சாத்தியம் குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தை விட அந்த கல்லூரியும், பழைய மாணவர்களும் கல்வியை மேம்படுவதற்கான பல்வேறு நீண்ட காலச் செயற்திட்டங்களையும் நீண்ட காலமாக நாட்டின் பல்வேறு பிராந்தியங்களிலும் முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. வடபுலத்தில் கல்வியில் மிளிரும் ஒரு பாரம்பரியப் பெருமையைச் சுமந்துள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சமூக சேவையிலும் மிகச் சிறந்த முன்னுதாரணமாக திகழ்ந்து வருவது மக்களால் பாராட்டப்பட்டுள்ளது.

# கடும் காற்றால் முறிந்த மரம் ஹற்றனில் 3 சிறுவர்கள் காயம்

ஹற்றன், ஜூன் 14

காற்றுடன் கூடிய கடும் மழையால் மரமொன்று முறிந்து விழுந்ததில் முன்று சிறுவர்கள் காயமுற்றுள்ளனர். அத்துடன், ஹற்றன் நோட்டன் பிரிட்ஜ் வீதி பல மணித் தியாலங்கள் போக்குவரத்து தடைப்பட்டிருந்ததாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.நோட்டன் அட்டன் பிரதான வீதியின் ஒஸ்போன் பங்களா டிவிசன் பகுதியிலே நேற்று முன்தினம் மாலை 05.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நோட்டன் பிரிட்ஜ் நிரதேசத்தில் பெய்த கடும் காற்றுடன் கூடிய மழையின் போது பங்களா டிவிசனை சேர்ந்த மூன்று சிறுவர்கள் வீதியோரமிருந்த பஸ்தரப் பிடத்தில் ஒதுங்கி நின்ற போது திடீரென பெரும் வாகை மரமொன்று முறிந்து பஸ்தரிப் பிடத்தின் மீது வீழ்ந்துள்ளது.

மரம் முறிந்து வீழ்ந்தமையினால் பஸ்தரிப்பிடம் முற்றாக சேதமடைந்ததுடன் அதனுள்ளே நின்ற மூன்று சிறுவர்கள் காயமுற்ற நிலையில் உடனடியாக அயலவர்களினால் டிக்கோயா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். காயமுற்ற சிறுவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதே வேலை நோட்டன் அட்டன் வீதி போக்குவரத்து பல மணி நேரம் தடைப்பட்டுள்ளது தோட்ட நிர்வாகமும் பொலிஸாரும் நேற்று மரத்தை வெட்டி அகற்றும் நடவடிக்கையில் ஈடுட்டுள்ளனர்.



# கடல் ஆமைகள் மரணம்

## சமுத்திர ஆய்வாளர்கள் வெளியிடும் அதிர்ச்சி தகவல்

எக்ஸ் - பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தை யடுத்து 19 கடல் ஆமைகள் இறந்து கரையொதுங்கியுள்ளன.

சூழலியல் ஆய்வாளர்களின் கருத்தின்படி கடல் கொந்தளிப்பு, மீன்பிடி வலைகளில் சிக்கிக் கொள்ளல் மற்றும் மீனவ படகுகளில் மோதுதல் உள்ளிட்ட காரணிகளே இதுவரையில் கடல் ஆமைகளின் இறப்பில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணிகளாக இருந்தன. எவ்வாறிருப்பினும் தற்போது இலங்கை கடற்பரப்பில் அவ்வாறு கடல் கொந்தளிப்போ, கடலுக்குள் நில அதிர்வோ ஏற்பட்டு அசாதாரணமானதொரு நிலைமையை தோற்றுவிக்கவில்லை. இந்நிலையில், கடற்பரப்பில் காணப்பட்ட ஒரேயோர் ஆபத்து யாதெனில் விபத்துக்குள்ளான கப்பலிலிருந்த இரசாயன பதார்த்தங்களாகும்.

ஆனால், 12 நாட்கள் என்ற குறுகிய காலத்திற்குள் 25 கடல் ஆமைகளும், பல்வகை மீனினங்களும் இறந்து கரையொதுங்கியபோதிலும், வனஜீவராசிகள் திணைக்களம் இவற்றின் மரணத்திற்கான காரணத்தை உறுதிபடக் கூறவில்லை. பேர்ள் கப்பலிலிருந்து வெளியான இரசாயனங்களும் இந்த உயிரினங்களின் இறப்புக்கு ஒரு காரணியாக இருக்கலாம் என்று சந்தேகிப்பதாக தெரிவித்துள்ளார்களே தவிர, ஸ்திரமாக எதனையும் கூறவில்லை. ஆனால், கப்பலிலிருந்து கசிந்து கடலில் கலந்துள்ள பெருமளவான வெவ்வேறு இரசாயன கழிவுகளே கடல் ஆமைகள் உள்ளிட்டவற்றின் இறப்பிற்கு காரணமாக இருக் கும் என்பதே தமது நிலைப்பாடு என்று சூழலியலாளர்களும், சமுத்திரவியல் ஆய்வாளர்களும் கூறுகின்றனர்.

உண்மையில் 25 கடல் ஆமைகள் இறப்பில் தாக்கம் செலுத்தும் காரணி யாதென சூழலியல் ஆய்வாளர், ஆமைகள் பாதுகாப்பு திட்டத்தின் தலைவர் துஷான் கப்புருசிங்க தெளிவுபடுத்துகின்றார்.

### ஆமைகள் இறப்பில் தாக்கம் செலுத்தும் இயற்கை காரணிகள்

நாட்டில் மேற்கு மற்றும் தென் கடற்பிரதேசங்களில் ஜூன் , ஜூலை மாதங்களில் சூறாவளியுடன் கூடிய காலநிலையே நிலவும். எனவே பேர்ள் கப்பல் விவகாரத்தை சற்றுபுறந்தள்ளி காலநிலையுடன் இணைத்து கவனம் செலுத்தும் போது வழமையாகவே கடல் ஆமைகள் இறந்து கரையொதுங்குவதை அவதானிக்க முடியும்.

காரணம் இவ்வாறு கடற்பிராந்தியங்களில் சூறாவளியுடனான காலநிலை நிலவுவதால் கடல் அலைகளால் ஆமைகள் கரையை நோக்கி அடித்துச் செல்லப்படும். அல்லது அலைகளின் வேகத்தால் அவை கடலிலுள்ள கற்பாறைகளில் மோதி காயமடைந்து இறந்து அல்லது பலத்த காயங்களுடன் கரையொதுங்குவது இயல்பு. இது குறிப்பிட்ட காலத்தில் வழமையாக இடம்பெறும் நிகழ்வாகும். இதன் போது பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையிலும் பல கடல் ஆமைகள் மீட்கப்படும். இது ஆமைகள் இறந்து கரையொதுங்குவதற்கு ஏதுவான இயற்கை காரணிகளில் முதலாவதாகும்.

### மீன்பிடி செயல்பாடுகள்

கடல் ஆமைகள் இறப்பதற்கு இரண்டாவது பிரதான காரணி மீனவர்களின் வலைகளில் சிக்கிக் கொள்வதாகும். மீன்பிடி வலைகளில் சிக்கி அவற்றிலிருந்து வெளிவர முடியாத சந்தர்ப்பங்களில் சுவாசிப்பதில் சிரமத்தை எதிர்கொண்டு ஆமைகள் இறப்பும் வாய்ப்புக்கள் அதிகமாகும். இதேவேளை மீன்பிடி படகுகளில் அடிபட்டு இறக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இவ்வாறு உயிரிழக்கும் ஆமைகள் சில சந்தர்ப்பங்களில் கடலில் மூழ்கும் அதேவேளை , சில சந்தர்ப்பங்களில் கரையொதுங்கும். அதற்கேற்ப கடந்த சில தினங்களாக நிலவும் காலநிலை காரணமாக வழமையைவிட இம்முறை அதிகளவாக கடல் ஆமைகளின் உடலகள் கரையொதுங்கியுள்ளன என்று கருத முடியும்.

### இரசாயங்களின் தாக்கமே அதிகூடிய வாய்ப்பு

எவ்வாறிருப்பினும் இந்த காரணிகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு, கடல் ஆமைகள் இறந்து கரையொதுங்குவதற்கும் பேர்ள் கப்பல் தீவிபத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று அர்த்தமில்லை. எனினும், இதனை விஞ்ஞானபூர்வமாக ஆய்வுகளை முன்னெடுத்து ஆதாரங்களுடனேயே உறுதியாகக் கூற முடியும். பேர்ள் கப்பலிலிருந்து பிளாஸ்ரிக் துணிக்கைகள், பொலித்தீன் பைகள், எரிபொருள், நைற்றிக் அமிலம், கோஸ்டிக் சோடா உள்ளிட்ட பல நச்சுப் பொருட்கள் கடலில் கலந்துள்ளன.

குறிப்பாக நைத்ரிக் அமிலம் என்பது மனித சருமத்தில்பட்டால் கூட சருமம் எரிந்து பெரும் காயத்தை ஏற்படுத்தக் கூடியளவிற்கு அபாயம் மிக்கதாகும். இவாறிருக்கையில் கடலில் உள்ள கல்சியம் காபனேற்றாலான பவளப்பாறைகள் காணப்படுகின்ற பகுதியில் அளவுக்கதிகமான நைற்றிக் அமிலம் கலக்கும் போது, பவளப்பாறைகள் கரையக் கூடும். இதுவும் கடல் ஆமைகள் உள்ளிட்ட உயிர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால், நைத்ரிக் அமிலம் பவளப்பாறைகள் உள்ள இடத்தில் மாத்திரம் கலக்கவில்லை. மாறாக நீர் தேங்கியுள்ள இடங்களிலும் நைத்ரிக் அமிலம் கலந்திருக்குமாயின் அது குறித்த பகுதியிலுள்ள சகல உயிரினங்களுக்கும் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும்.

பேர்ள் கப்பல் தீ விபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் கடல்நீர் செல்லும் திசை வடக்கிலிருந்து தெற்கு நோக்கியதாகவே காணப்பட்டது. அதன் காரணமாகவே நீர்கொழும்பிலிருந்து சிலாபம் , புத்தளம், கற்பிட்டி, மன்னார் உள்ளிட்ட பகுதிகளுக்கு கப்பலின் கழிவுகள் செல்லவில்லை. மாறாக நீர்கொழும்பிலிருந்து தெகிவளை, பாணந்துறை, வாத்துவ, களுத்துறை, காலி, மிரிஸ்ஸ, மாத்தறை தங்கல்ல - ரெகவ ஆகிய பிரதேசம் வரை சென்றுள்ளன. ரெகவ பிரதேசத்திற்கு அப்பால் இவை இதுவரையில் செல்லவில்லை. இவை சிறிது காலத்தின் பின்னர் ஏனைய நாட்டு கடற்பிராந்தியங்களை நோக்கி செல்லக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

இறந்த மீன்களின் சிறகுகளுக்கிடையேயும், வாயிலும் பிளாஸ்ரிக் துணிக்கைகள் சிக்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது. இரை என எண்ணி கடல் ஆமைகள் , மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்கள் இவற்றை உட்கொண்டிருக்கும். ஆனால், இவை உக்காத பொருட்கள் என்பதோடு , குறித்த உயிரிகளின் உணவு தொகுதிக்குள் இறுகி அவற்றின் உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவையுமாகும்.

கடல்ஆமைகள் பெரும்பாலும் சிறிய மீனினங்கள் மற்றும் மீன் முட்டைகள் என்பவற்றையே உணவாக உட்கொள்ளும். அதற்கமைய பேர்ள் கப்பலிலிருந்து கடலில் கலந்த சிறிய பிளாஸ்ரிக் துணிக்கைகளை இரையெனக் கருதி அவற்றை ஆமைகள் அதிகளவில் உட்கொண்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் மிக அதிகம். இந்த பிளாஸ்ரிக் துணிக்கைகள் தவிர பேர்ள் கப்பலிலிருந்து வெளியான நைத்ரிக்அமிலம் போன்றவையும் இந்த உயிரினங்களின் இறப்பில் தாக்கம் செலுத்தக் கூடும்.

பவளப்பாறைகளை அண்டி ஜெல்லி மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன. எனவே, பவளப்பாறைகளில் நைத்ரிக் அமிலம் போன்றவை கலக்கும்போது அதனை அண்டி வாழும் இவ்வாறான உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன. மற்றுமொரு விடயம் ஜெல்லி மீன் போன்றவற்றையும் கடல் ஆமைகளின் பெரும்பாலாக உணவாக உட்கொள்ளும். எனவே, இவற்றை உண்ணும் கடல் ஆமைகளில் உடலில் விஷத்தன்மையுடைய இரசாயனங்கள் கலக்கின்றன. இதுவும் கடல் ஆமைகள் உயிரிழக்க பிரதான காரணமாகிறது.

### உண்மையான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை

எவ்வாறிருப்பினும் கடல் ஆமைகளின் உயிரிழப்புக்கான - உண்மையான காரணி எது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள அவற்றின் உடல்கள் ஆய்வுகூடங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இதன்போது இவை எவ்வாறான உணவுகளை உட்கொண்டுள்ளன? அவற்றின் தசைகளில் இரசாயனம் கலந்துள்ளதா என்பது குறித்து பரிசோதிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு இறந்து கரையொதுங்கிய 10 கடல் ஆமைகளின் உடல்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தால் எடுத்துச்செல்லப்பட்டு பரிசோதனைக்கு உட்டுபடுத்தப்பட்டுள்ளன.

ஆனால், இவற்றின் உயிரிழப்புக்கு கப்பலிலிருந்து வெளியேறிய இரசாயனங்களும் காரணமாக அமையலாம் என்று சந்தேகிக்க முடியும் என்று கூறியுள்ளார்களே தவிர, ஸ்திரமாக எதனையும் கூறவில்லை. வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு ஆமைகளின் உடல்களை பரிசோதனை செய்வதற்கு போதிய அனுபவம் இன்மை அல்லது அதற்கு பொருத்தமான அதிகாரிகள் இன்மை என்பனவே இந்த குறைபாட்டுக்கு காரணமாகும். ஆமைகளின் இறப்புக்கு இதுவும் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்க முடியும் என்று அறிக்கையிடுவது பிரயோசனமற்றது. கடல் ஆமைகளின் உயிரிழப்பிற்கு என்ன காரணம் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.


பேர்ள் கப்பல் தீ விபத்தின் பின்னர் 29 கடல் ஆமைகள் உயிரிழந்தன. இவற்றில் பல்வகை தன்மையுடைய கடல் ஆமைகள் உள்ளடங்குகின்றன. சிறிய மீன்களை அதிகளவான உண்ணக் கூடிய ஆமைகளே பெருமளவில் உயிரிழந்தன. இந்நிலையில் பேராதனை பல்கலைக் கழகத்திலுள்ள ஆய்வு கூடத்திற்கும் உயிரிழந்த ஆமைகளின் உடல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் அவற்றின் அறிக்கைகளும் இதுவரையில் எமக்கு கிடைக்கப்பெறவில்லை.

சூழலியல் ஆய்வாளர் துஷான் கப்புருசிங்க தெளிவுபடுத்தல்களுக்கு அமைய கடல் ஆமைகளின் இறப்பில் பேர்ள் கப்பல் இரசாயனக் கழிவுகளே அதிகளவில் தாக்கம் செலுத்தக் கூடும். பிளாஸ்ரிக் துணிக்கைகளும், இரசாயன கழிவுகளும் இலங்கை கடற்பரப்பின் பௌதிக சூழலுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதேபோன்று கடல் ஆமைகள் மற்றும் மீனினங்கள் உள்ளிட்ட உயிரினங்களின் இருப்பிற்கும் அவை அச்சுறுத்தலாக அமைந்துள்ளன.

எனவே, வனஜீவராசிகள் திணைக்களம், விடயத்திற்கு பொறுப்பான ஏனைய நிறுவனங்கள் இதற்கான உண்மை காரணியை வெளிப்படுத்துபவை மேலும் தாமதிக்கக் கூடாது என்பதோடு, எதிர்வரும் காலங்களில் கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். ■

ஈழநாடு





# கொரோனா வைரஸ் திரிபுகள் இன்னும் எவ்வளவு மோசமடையும்?

"கொரோனா வைரஸில் இருந்து மீள்வதற்கு சரியான தந்திரமாக என்ன இருக்கும் என்பதை கணிப்பது சிரமமே. பல்வேறு வைரஸ்கள் தொற்றுநோயைத் தொடர வெவ்வேறு வழிமுறைகளையும் நுட்பங்களையும் பயன்படுத்துகின்றன."

**ஜேம்ஸ் கலேகர்**

**2019** ஆம் ஆண்டின் இறுதியில் வுஹானிலிருந்து வெளிவந்த கொரோனா திரிபை விட, மிக எளிதாக, அநேகமாக சுமார் இரண்டு மடங்கு எளிதாக பரவக் கூடிய ஒரு வைரஸை நாம் இப்போது எதிர்கொண்டு வருகிறோம் என்பது தெளிவாகிறது.

இங்கிலாந்தின் கென்ட் நகரில் முதன்முதலில் அடையாளம் காணப்பட்ட ஆல்பா கொரோனா திரிபு, கொரோனா வைரஸ் பரவும் திறனில் பெரிய முன்னேற்றம் கண்டது. இப்போது இந்தியாவில் முதலில் காணப் பட்ட டெல்டா கொரோனா திரிபு, வைரஸ் பரவலில் இன்னும் முன்னேறி இருக்கிறது.

மென்மேலும் நாம் புதிய மற்றும் மேம்பட்ட, கட்டுப்படுத்துவதில் கூடுதல் சிரமங்களை ஏற்படுத்தக் கூடிய கொரோனா திரிபுகளை நாம் எதிர் கொள்ள இருக்கிறோமா? அல்லது கொரோனா வைரஸ் எவ்வளவு மோசமடையும் என்பதற்கு ஏதாவது வரம்பு இருக்கிறதா?

அதை பார்ப்பதற்கு முன், இந்த வைரஸ் தொற்றின் வரலாற்றை நினைவில் கொள்வது அவசியமாகிறது. கொரோனா வைரஸ் முற்றிலும் வேறுபட்ட உயிரினங் களில் தொற்றை ஏற் படுத்தத் தொடங்கியது. இவ்வைரஸ் முதலில் வௌவால்களில் காணப்பட்டது, இப்போது மனிதர்களிடம் பரவிக் கொண்டிருக்கிறது.

வைரஸ்கள் மனிதர்களிடம் பரவும் போது, "அவை முழுமையானவையாக இருப்பது மிகவும் அரிது" என லண்டனின் இம்பீரியல் கல்லூரியின் வைராலஜிஸ்ட் பேராசிரியர் வெண்டி பார்க்லே கூறினார். "வைரஸ்கள் மனித உடலில் குடியேறுகின்றன, பின்னர் அவை வலுவடைவதற்கு நல்ல நேரம் கிடைக்கிறது."

வைரஸ் பரவலுக்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன, ப்ளூ பெருந்தொற்று முதல் எபோலா நோய் வரை, முதலில் வைரஸ் வெளிவரும் பிறகு தான் வேகமாக பரவத் தொடங்கும் என்கிறார் பேராசிரியர்.

**எவ்வளவு பரவும்?**

வைரஸ்களின் உயிரியல் பரவல் சக்தியை ஒப்பிடுவதற்கான சரியான வழி அவற்றின் R0 ஐப் பார்ப்பது தான் (R-naught என அழைக்கப்படுகிறது).

## New names proposed for Covid variants

| Country/region | Scientific name | WHO name |
|---|---|---|
| Kent, UK | B.1.1.7 | Alpha |
| South Africa | B.1.351 | Beta |
| Brazil | P.1 | Gamma |
| India | B.1.617.2 | Delta |

Source: WHO BBC

யாருக்கும் நோயெதிர்ப்பு இல்லாமல், நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்க யாரும் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கும் போது, சராசரியாக நோய்த்தொற்றுடைய ஒவ்வொரு நபரும் எத்தனை பேருக்கு வைரஸைக் கடத்துகிறார்கள் என்பது தான் R0.

வுஹானில் தொற்றுநோய் தொடங்கியபோது அந்த எண்ணிக்கை 2.5 ஆக இருந்தது, டெல்டா மாறுபாட்டிற்கு 8.0 வரை அதிகமாக இருக்கலாம் என இம்பீரியலில் உள்ள நோய் மாடல்லர்கள் தெரிவித்தனர்.

"இந்த வைரஸ் எங்களை ஆச்சரியப்படுத்தியுள்ளது, இது நாங்கள் அஞ்சியதற்கும் அப்பாற்பட்டது" என்கிறார் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் வைரஸ் பரிணாம வளர்ச்சியை ஆராயும் மருத்துவர் அரிஸ் கட்ஸொராகிஸ்.

"இது 18 மாதங்களில் இரண்டு முறை நிகழ்ந்துள்ளது, இரு பெரும் திரிபுகள் (ஆல்பா மற்றும் பின்னர் டெல்டா) ஒவ்வொன்றும் 50% அதிகமாக பரவக்கூடியது என்பது ஒரு மிகப் பெரிய மாற்றமாகும்."

கொரோனா எவ்வளவு அதிகமாகப் பரவும் என்பதற்கு ஒரு உச்ச வரம்பை கணிக்க முயல்வது முட்டாள்தனம் என இவர் கருதுகிறார். ஆனால் அடுத்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா பரவலின் வேகத்தை அவர் எளிதாகக் காணலாம்.

பிற வைரஸ்கள் மிக அதிகமான R0 களைக் கொண்டுள்ளன, உதாரணமாக தட்டம்மை மிக அதிக அளவில் பரவும் தன்மை கொண்டது.

"அது இன்னும் வேகமாக பரவ வாய்ப்புள்ளது" என பேராசிரியர் பார்க்லே கூறினார். "தட்டம்மை நீங்கள் கேட்கும் நபரைப் பொறுத்து R0 14 முதல் 30 வரை இருக்கும், கொரோனா எப்படி மேற்கொண்டு பரவப் போகிறது என்று எனக்குத் தெரியவில்லை."

**கொரோனா திரிபுகள் என்ன செய்கின்றன?**

கொரோனா வைரஸ், தன் பரவலை அதிகரித்துக் கொள்ள பல தந்திரங்களை மேற்கொள்கின்றன, அவை:

1. கொரோனா நம் உடலுக்குள் நுழைவதற்கான வழிகளை மேம்படுத்திக் கொள்கிறது.

2. காற்றில் நீண்ட காலம் உயிர்வாழ்கிறது.

3. வைரல் லோட் அதிகரிப்பதால் நோயாளிகள் அதிக வைரஸ்களை சுவாசம் மற்றும் இருமல் மூலம் வெளியிடுகிறார்கள்.

4. கொரோனா நோய்த்தொற்றின் போதும் அது மற்றொரு நபருக்கு பரவும்போது மாறுகிறது.

நம் உடலில் சில வைரஸ் தொற்று ஏற்பட்டால் அதை சமாளிக்க இன்டர்ஃபெரான் எதிர்வினைகள் தூண்டப்படும். கொரோனா வைரஸ் தன்னை மேம்படுத்திக் கொண்டு, இந்த இன்டர்ஃபெரான் எதிர்வினைகளின் கண்ணில் படாமல் கடப்பதன் மூலம், ஆல்பா திரிபு அதிகம் பரவக்கூடிய திரிபாக மாறியது.

நாம் கிரேக்க எழுத்துக்களின் வழியாக ஒமேகா என்கிற திரிபை அடையும் நேரத்தில், தடுத்து நிறுத்த முடியாத ஒரு கோரமான கொரோனா திரிபை எதிர்கொள்வோம் என பொருளல்ல.

"இறுதியில் எப்படிப் பார்த்தாலும் சில வரம்புகள் இருக்கின்றன, எல்லா கொரோனா மரபணு மாற்றங்களின் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய மரபணு மாற்றங்கள் ஒன்று சேர்ந்து ஒரு சுப்பர் - அல்டிமேட் வைரஸ் உருவாகவில்லை" என மருத்துவர் கட்ஸொராகிஸ் கூறினார்.

வரலாறு காணாத அளவுக்கு மிக விரைவான தடுப்பூசி திட்டம், கொரோனா வைரஸுக்கு வேறு மாதிரியான சவாலை ஏற்படுத்தும், அதோடு வைரஸை வேறு திசை நோக்கி பரிணாம வளர்ச்சி காணச் செய்யும்.

"கொரோனா வைரஸில் ஏற்படும் மாற்றம் தடுப்பூசிகளைக் கடப்பதாக இருக்கலாம், மறு புறம் அதன் பரவும் திறன் வலுவிழந்ததாக இருக்கலாம்" என மருத்துவர் கட்ஸொராகிஸ் கூறினார்.

பீட்டா கொரோனா திரிபை எடுத்துக்காட்டாகக் கூறுகிறார் - இத்திரிபு E484K எனப்படும் பிறழ்வைக் கொண்டுள்ளது, இது நோயெதிர்ப்பு மண்டலத்தைத் தவிர்க்க உதவுகிறது, ஆனால், இத்திரிபால் அதிகம் பரவ முடியவில்லை. ஆனால், டெல்டா கொரோனா திரிபில் காணப்படும் பிறழ்வுகள் நோய் பரவுவதற்கு உதவு கின்றன, அதோடு நோய் எதிர்ப்பு சக்தியை ஏமாற்றி மனித உடலில் நுழையவும், நீண்ட நாட்கள் இருக்கவும் கொஞ்சம் உதவுகின்றன.

கொரோனா வைரஸில் இருந்து மீள்வதற்கு சரியான தந்திரமாக என்ன இருக்கும் என்பதை கணிப்பது சிரமமே. வெவ்வேறு வைரஸ்கள் தொற்றுநோயைத் தொடர வெவ்வேறு வழிமுறைகளையும் நுட்பங்களையும் பயன்படுத்துகின்றன. தட்டம்மை அதிகம் பரவக் கூடியது தான், ஆனால் வாழ்நாள் முழுவதற்குமான நோய் எதிர்ப்பு சக்தியை விட்டுச்செல்கிறது. எனவே அவ்வைரஸ் எப்போதும் புதியவரைக் கண்டுபிடிக்க வேண்டும். இன்ஃப்ளூவன்ஸா மிகக் குறைவான R0 ஐக் கொண்டுள்ளது, ஆனால் தொடர்ந்து நோய் எதிர்ப்பு சக்தியைக் கடந்து பரவக் கூடியது.

"நாம் மிகவும் சுவாரஸ்யமான, கணிக்க முடியாத கட்டத்தில் இருக்கிறோம், அடுத்த ஒரு வருடத்தில் கொரோனா வைரஸ் எப்படி பரவும் என்று கணிப்பது கடினம்" என பேராசிரியர் பார்க்லே கூறினார்.

வலுவான தடுப்பூசி பிரசாரங்களைக் கொண்ட பணக்கார நாடுகளில், பரவலான நோய் எதிர்ப்பு சக்தி காரணமாக அடுத்து வரும் கொரோனா திரிபுகள் ஒரு பெரிய பிரச்னையை ஏற்படுத்தாது என நம்பப்படுகிறது.

**- பி.பி.சி.**

# புலமைச் சிகரம்


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை - 5
வினாத்தாள் II

நேரம் - 45 நிமிடம்
ஆசிரியர் - சரத்பாபு

28. 12 cm நீளமான 6 பேனாக் குழாய்களை ஒன்றோடு ஒன்று ஒவ்வொன்றினூடாக இணைக்கப்படும் போது 5 cm ஒன்றின் மீது வைத்து இணைக்கப்படுகிறது. இவ்வாறு இணக்கப்பட்ட பேனாக்குழாய்களின் மொத்த நீளம் யாது?....................................

29. $\frac{3}{4} + \frac{1}{2} =$ ............

30. 

இங்கே A பாத்திரம் மூலம் 4 தடவை பெரிய பாத்திரத்திற்குள் ஊற்றிய பின் மேலும் நிரப்புவதற்கு B பாத்திரத்தால் எத்தனை தடவை பெரிய பாத்திரத்தை முழுமையாக நிரப்ப ஊற்ற வேண்டும்?

..............................................................

31. ஒரு பெட்டியில் 24 பழங்களை அடுக்க முடியும். எனின் 250 பழங்களை அடுக்க தேவையான பெட்டிகள் எத்தனை?

..............................................................

* **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

32. எட்டுக் கால்களையுடைய பிராணிகளில் ஒன்று?
1. நண்டு 2. தேள் 3. குளவி 4. சிலந்தி

33. இலங்கைக்கு உரித்தான பறவைகளில் ஒன்று?
1. மயில் 2. காட்டுச் செண்பகம்
3. கிளி 4. காகம்

34. மஞ்சள் நிற மரக்கறிகள், பழங்களில் காணப்படும் போசணைக்கூறு?
1. விற்றமின் A 2. விற்றமின் B 3. விற்றமின் C 4. விற்றமின் D


35. பிரதான வீதிகளில் A என அடையாளப்படுத்துவது போல அதி வேக நெடுஞ்சாலை குறிக்கும் எழுத்து?
1. E 2. B 3. S 4. P

36. சர்வதேச செய்தி நிறுவனங்களில் ஒன்று?
1. டான் T.V 2. ஹிரு F.M 3. BBC 4. ரூபவாகினி

37. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன இலட்சினை?
1. 2. 3. 4

38. ISBN எனும் குறியீடு பொறிக்கப்பட்டு இருப்பது?
1. பத்திரிகை 2. ரின்மீன்கள் 3. புத்தகம் 4. பற்பசை

39. சிறுவர்களைச் சட்டவிரோதமாக வேலைக்கு அமர்த்தும் போது அறிவிக்க வேண்டிய தொலைபேசி 1929 என்பது போல இலஞ்ச ஒழிப்பு சம்பந்தமான அறிவித்தல்?
1. 118 2. 1969 3. 1951 4. 1954

40. இவ்விளையாட்டு  குறிப்பது?
1. தாயம் 2. பல்லாங்குழி 3. சடுகுடு 4. ஏணியும் பாம்பும்

41. இலங்கை அமைந்திருப்பது பற்றிய பிழையான கூற்று?
1. இந்தியாவிற்கு தெற்கே ஆகும். 2. ஆபிரிக்க நாடுகளுக்கு கிழக்கே ஆகும்.
3. இந்து சமுத்திரத்தின் மத்தியில் ஆகும். 4. மாலைதீவுக்குக் கிழக்கே ஆகும்.

42. இலங்கை கலைத்துவப் படைப்புக்களில் ஒன்றான சந்திரவட்டக்கல்லில் காணப்படும் விலங்குகளில் ஒன்று?
1. கிளி 2. அன்னம் 3. புறா 4. மயில்

43. இரண்டாம் வகை நெம்புகோலுக்கு உதாரணம்?
1. பாக்குவெட்டி 2. குறடு 3. கத்திரிக்கோல் 4. தணல் இடுக்கி

44. 

இவ் உரு குறிப்பது?
1. பொருட்கள் விற்பனை நிலையம் 2. சிற்றுண்டிச்சாலை
3. வீட்டுத்தளபாடம்
4. இரும்பினால் செய்யப்படும் பொருட்கள் விற்கும் இடம்

45. சிவப்பு + நீலம் ஆகிய நிறங்களை சம அளவு கலப்பதால்?
1. ஊதா 2. பச்சை 3. நீல சிவப்பு 4. கபிலம்

46. அண்மையில் இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில் அடங்காதது
1. வெள்ளப்பெருக்கு 2. சூறாவளி 3. காட்டுத்தீ 4. குப்பை மேட்டுச்சரிவு

47. அமெரிக்கா ஜனாதிபதிகளில் ஒருவர்
1. நரேந்திரமோடி 2. ரூஸ்வேல்ட் 3. அப்துல்கலாம் 4. மைத்திரிபால சிறிசேன

48. இலைகளைப் பயன்படுத்தி கூடுகட்டும் பிராணி
1. தையல்சிட்டு 2. புளுணி 3. நாரை 4. காகம்

49. தற்போது கட்டாயக் கல்வி வயது?
1. 5-14 வயது 2. 1-16 வயது 3. 5-16 வயது 4. 5-18 வயது

50. வாகன இலக்க தகட்டில் CP HA 4359 எனப் பதியப்பட்டிருக்கிறது இது எந்த மாகாணத்தில் பதியப்பட்டது
1. வடக்கு 2. மத்திய 3. தெற்கு 4. வடமத்திய

51. வாகனச் சாரதி ஒருவர் வீதியால் வாகனம் செலுத்தும் போது கட்டாயம் வைத்திருக்கவேண்டியது
1. அடையாள அட்டை 2. காப்புறுதிப் பத்திரம்
3. வாகன அனுமதிப் பத்திரம் 4. சாரதி அனுமதிப்பத்திரம்

52. பொதுச்சுகாதாரப் பரிசோதகரைக் குறிக்கும் பதம்
1. D.M.O 2. PHI 3. MOH 4. AGA

53. தெறியோட்டை தைக்கப் பயன்படும் தையல்?
1. கம்பளி 2. பெருநூலோடி 3. விஸ்பம் 4. சோம்

54. இலங்கை தேசியகீதத்திற்கு இசையமைத்தவர்
1. ஆனந்தசமரக்கோன் 2. அமரதேவா
3. மு.நல்லதம்பி 4. C.W.W கன்னங்னரா

55. குப்பைக் கூடைகளில் இரும்பு போன்ற உலோகப் பொருட்களை இடுவதற்குப் பயன்படும் குப்பைக் கூடையின் நிறம்?
1. கறுப்பு 2. சிவப்பு 3. பச்சை 4. மஞ்சள்



## யாழில் வீடுடைத்து திருடியவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 14

சுன்னாகம், கந்தரோடையில் வீடுடைத்து திருடிய ஒருவர் 24 மணி நேரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து திருடப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சுன்னாகம், கந்தரோடை பாரதி வீதியில் உள்ள வீடொன்றில் வீடுடைத்து 21 பவுண் தாலிக்கொடி, மூக்குத்தி, உண்டியல் பணம் மற்றும் சைக்கிள் என்பன திருடப்பட்டன.

வீட்டில் இருந்தவர்கள் அயலில் உள்ள காணியை துப்புரவு செய்யச் சென்றிருந்த வேளை இந்தத் திருட்டு இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸார், சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

(இ - 03)

# 33 ஆண்களும் 30 பெண்களுமாக மேலும் 63 பேர் தொற்றால் உயிரிழப்பு!

## கொரோனா மொத்த மரணம் 2,136 ஆக அதிகரிப்பு

**கொழும்பு, ஜூன் 14**

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 63 பேர் உயிரிழந்துள்ளனர்.மே 23ஆம் திகதி முதல் ஜூன் 11ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்று சுகாதார சேவைகள் பணிப் பாளர் உறுதிப்படுத்தியுள்ளார் என அரச தகவல் திணைக்களம் நேற்றுக் காலை அறிவித்துள்ளது.**



உயிரிழந்தவர்களில் 30 பெண்களும், 33 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் எனவும் அரச தகவல் திணைக் களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந் தோரின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 136 ஆக அதிகரித் துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் வரையில் 22 இலட்சத்து 59 ஆயிரத்து 385 பேர் முதலாவது டோஸ் தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளனர் என்று தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

(இ)

## ‘நிழல் உலக தாதா’ தெல்பாலாவின் மகள் ஹெரோயினுடன் சிக்கினார்



கொழும்பு, ஜூன் 14

நிழல் உலக தாதா ‘தெல்பாலா’ என்றழைக்கப்படும் கருப்பையா பாலனின் மகளான நிர்மலா (வயது - 41) பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு,கிராண்ட்பாஸ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே 50 கிராம் ஹெரோயினுடன் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுவிட்டு, இந்தியா தப்பிச் சென்று தலைமறைவாக வாழ்ந்த தெல்பாலா அங்கேயே உயிரிழந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

(இ)

## கொரோனா தடுப்பு சட்டத்தை மீறிய மேலும் 1,353 பேர் கைது!



கொழும்பு, ஜூன் 14

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும்1,353 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டம் நடை முறைக்கு வந்த கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இதுவரை 31 ஆயிரத்து 395 பேர் அந்தச் சட்டத்தை மீறிய குற்றச் சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப் பிட்டார்.

(இ)

# ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் ராஜபக்ஷ அரசு விரைவில் கவிழும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. சொல்கிறார்




நுவரெலியா, ஜூன் 14

“ராஜபக்ஷ அரசின் தீர்க்கதரிசனம் அற்ற தீர்மானத்தின் காரணமாக தற்போது எரிபொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இதன்மூலம் ஏழைகளின் வயிற்றில் இந்த அரசு அடித்துவிட்டது. இந்த அரசின் வீழ்ச்சி வெகுதொலைவில் இல்லை.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளிக் கட்சியான மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். நுவரெலியாவில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

”இன்று எமது நாட்டில் கொரோனாவின் தாக்கம் நாலுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இதன் காரணமாக எங்களுடைய மக்கள் பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறானதொரு நிலையில் அரசு எரிபொருட்களின் விலையை அதிகரித்திருப்பதானது மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு மிதித்த கதையாகவே இருக்கின்றது.

இந்த எரிபொருட்களின் விலையேற்றம் காரணமாக எங்களுடைய பெருந்தோட்டத் தொழிலார்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். காரணம் இன்றும் பல பெருந்தோட்டப் பகுதிகளில் மண்ணெண்ணையையே அதிகமாக எங்களுடைய மக்கள் பாவித்து வருகின்றார்கள். இந்த விலையேற்றத்தை இவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது.

இந்த எரிபொருட்களின் விலையேற்றம் காரணமாக பாண் உட்பட வெதுப்பக உற்பத்திகளின் விலைகளும் அதிகரிப்பதற்கான சாத்தியம் இருக்கின்றது. இது சாதாரண மக்களைப் பெரிதும் பாதிக்கும்.

அதுமட்டுமல்லாமல் ஓட்டோ ஓட்டுநர்களின் நிலைமை இன்னும் பரிதாபகரமான ஒரு நிலைக்குச் சென்றுவிடும். அவர்கள் தங்கள் தொழிலைச் செய்ய முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்ற இந்தநிலையில் விலையேற்றம் இன்னும் பாதிப்பையும் சாதாரண மக்களிடம் அதிக கட்டணத்தையும் அறிவிட வேண்டிய நிலைமை ஏற்படும்.

போக்குவரத்துக் கட்டணம் அதிகரிக்கும். ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். இப்போது இருக்கின்ற விலைகளையே பொதுமக்கள் தாங்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள். இதில் இன்னும் விலையேற்றம் ஏற்பட்டால் மக்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

விலேயேற்றம் பிழையானது என “மொட்டு“ கட்சியின் செயலாளரே கருத்து வெளியிட்டுள்ளார். அப்படியானால் இது யாருடைய வழிகாட்டலில் நடைபெற்றது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

ஆட்சியில் இருக்கின்ற அரசு ஏழைகளின் தோழனாக இருக்க வேண்டும். அப்படி இருந்தவர்தான் முன்னாள் ஜனாதிபதி மறைந்த ரணசிங்க பிரேமதாஸ. அவர் மறைந்தாலும் அவருடைய சேவைகளை இன்றும் மக்கள் மறக்கவில்லை. அதற்குக் காரணம் அவர் ஏழைகளின் பங்காளனாக இருந்தவர். அதேபோல் இந்தியாவின் தமிழ்நாட்டிலும் மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் ஏழைகளுக்காகப் பாடுப்பட்டவர். எனவே, ஏழைகளின் வயிற்றில்அடிக்கின்ற எந்த அரசும் ஆட்சியில் நிலைத்திருக்க முடியாது. இந்த அரசு வீழ்ச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது” - என்றார்.

(இ)

### பருவநிலை மாற்றத்தை சமாளிக்க

# 19.5 இலட்சம் கோடி ரூபாய் வழங்க ஜி-7 நாடுகள் முடிவு!

கார்பிஸ்குடா, ஜூன் 14

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தீமைகளை தடுக்கும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க ஏழை நாடுகளுக்கு ஆண்டுக்கு 10 ஆயிரம் கோடி டொலர்களை - நம் நாட்டு மதிப்பில்சுமார்19 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் உதவியாக வழங்க ஜி-7 நாடுகள் உறுதியளித்துள்ளன.

கரியமில வாயு உமிழ்வைக் குறைத்து, புவி வெப்பமடைதலை தடுக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

வளரும் நாடுகளில் உட்கட்டமைப்பு திட்டங்களை மேம்படுத்துதல், பசுமையான, நிலையான தொழில்நுட்பத்தை நோக்கி நகர்தல் போன்ற திட்டங்களின் ஒரு பகுதியாக இந்த உதவியை வழங்க உலகின் 7 செல்வந்த நாடுகளின் கூட்டமைப்பான ஜி-07 தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.




பருவநிலை மாற்றத்தின் தீமைகளைக் குறைக்கும் வகையிலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க ஏழை நாடுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் 10 ஆயிரம் கோடி டொலர் நிதியுதவியை வழங்க வளர்ச்சியடைந்த நாடுகள் கடந்த 2009 ஆம் ஆண்டு ஐ. நா. சபையில் ஒப்புக்கொண்டன. எனினும், இந்த வாக்குறுதிகள் பல்வேறு தடைகளால் நிறைவேற்றப்படவில்லை.

இந்த நிலையில், இந்தத் திட்டத்தை முன்னெடுக்க ஏதுவாக ஒவ்வோர் ஆண்டும் ஏழை நாடுகளுக்கு 10 ஆயிரம் கோடி டொலர் நிதி உதவிகளை வழங்க ஜி-07 தலைவர்கள் நேற்று முன்தினம் மீண்டும் உறுதியளித்தனர். (ஐ)



## மருத்துவமனைமீது தாக்குதல் 13 பேர் பலி: 27பேர் படுகாயம்!

அலெப்போ, ஜூன் 14

சிரியாவில் தனியார் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர். அத்துடன் 27 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சிரியாவில் அரச படைகளுக்கும் - கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் மோதல் நிலவி வருகின்றது.

சுமார் 10 ஆண்டுகள் நீடிக்கும் இந்தப் போரில் பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், கிளர்ச்சியாளர்கள் தமது பகுதிகளில் மருத்துவ வசதிகளை பெறுவதற்காக திட்டமிட்டு மருத்துவமனைகளில் தாக்குதல்களை நடத்துகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இவ்வாறான தாக்குதல் ஒன்றே நேற்று ஆப்ரின் நகரில் தனியார் மருத்துவமனை மீது குர்திஸ் போராளிகள் நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் 13 பொதுமக்கள் பலியாகினர். 27இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஐ)

## ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் அமெரிக்காவை இணைக்க பேச்சு

வியன்னா, ஜூன் 14

ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தில் அமெரிக்காவை மீண்டும் இணைப்பதற்கான அடுத்தகட்டப் பேச்சை வல்லரசு நாடுகளின் பிரதிநிதிகள் ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் சனிக்கிழமை தொடங்கினர்.

ஈரானுடனான 2015ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக பல கட்டங்களாக வியன்னாவில் நடைபெற்று வரும் மாநாடு மீண்டும் சனிக்கிழமை தொடங்கியது.

இந்தப் பேச்சில் ரஷ்யா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் அமெரிக்காவை இணைப்பது குறித்து அவர்கள் தீவிரமாக விவாதித்தனர்.

ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஐ.நா. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்னிக்கும் இடையே கடந்த 2015-ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தத்தில், தனது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரான் சம்மதித்தது.

பதிலுக்கு, ஈரான் மீதான பொருளாதார தடைகள் நீக்கப்பட்டன. ஜனாதிபதி ஒபாமா காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்திலிருந்து ஜனாதிபதி ட்ரம்ப் காலத்தில் அமெரிக்கா விலகியது. இதைத் தொடர்ந்து ஈரான் மீது தடை விதிக்கப்பட்டது.

இதற்கு பதிலடியாக ஈரான் ஒப்பந்த நிபந்தனைகளை மீறியது. தற்போது அந்த ஒப்பந்தம் முறிந்துபோகும் அபாயம் நிலவி வருகிறது. இதற்கிடையே, அமெரிக்காவின் புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ள ஜோ பைடன், ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் இணைவதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்தச் சூழலில், ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்காக வியன்னாவில் கடந்த ஏப்ரல் தொடக்கம் முதல் பல கட்டங்களாக பேச்சு நடைபெற்று வருகிறது. (ஐ)

## ஹஜ் பயணம் செய்வதற்கு வெளிநாட்டினருக்கு தடை!

ரியாத், ஜூன் 14

கொரோனா பரவல் அபாயம் கருதி, வெளிநாடுகளை சேர்ந்தவர்கள் இந்த ஆண்டு ஹஜ் பயணம் மேற்கொள்வதற்கு சவூதி அரேபியா தடை விதித்துள்ளது.

இதுகுறித்து அந்த நாட்டு அதிகாரிகள் கூறியதாவது:

கொரோனா அபாயம் கருதி, ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள இந்த ஆண்டு தடுப்பூசி செலுத்திய 60 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படவுள்ளது.

தற்போது சவுதி அரேபியாவில் இருப்பவர்கள் மட்டுமே ஹஜ் பயணம் மேற்கொள்ள முடியும். வெளிநாட்டினருக்கு அனுமதி இல்லை என்று கூறியுள்ளது. (ஐ)

## வௌவால்களில் 24 வகை கொரோனா வைரஸ்கள்!

### 4 வைரஸ்கள் கோவிட் -19ஐ ஒத்தவை சீன ஆராய்ச்சியாளர்கள் அறிவிப்பு

பீஜிங், ஜூன் 14



வௌவால்களில் இருந்து மொத்தம் 24 கொரோனா வைரஸ்களை சேகரித்துள்ளதாக சீன ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் சீனாவின் வுஹான் நகரிலிருந்து பரவ ஆரம்பித்தது. இன்று உலகையே ஆட்டிப் படைக்கும் இந்த வைரஸால் 38 இலட்சம் பேர் உயிரிழந்தனர். 17.6 கோடி பேர் தொற்றுக்கு இலக்காகினர்.

இந்த நிலையில், 'ஜேர்னல் செல்' இதழில் வெளியான ஆய்வுக் கட்டுரையில் சீன ஆய்வாளர்கள் தெரிவித்த விடயங்கள் வருமாறு,


சீனாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் புதிய வகை கொரோனா வைரஸ்களை காடுகளில் தாம் சேகரித்துள்ளனர் என்று அறிவித்துள்ளனர். வௌவால்கள் மத்தியில் எத்தனை கொரோனா வைரஸ் வகைகள் உள்ளன என்பது குறித்தும் அதில் எத்தனை வகைகள் மனிதர்களுக்கு பரவும் அபாயம் உள்ளது என்பது குறித்தும் கண்டறிய இது உதவும் என்று அவர்கள் கூறினர்.

மேலும், இதில் 4 வைரஸ்கள் தற்போது பரவும் கோவிட் 19 வைரஸுடன் ஒத்துள்ளது. கடந்த 2019 மே மாதம் முதல் 2020 நவம்பர் மாதம் வரை சீனாவின் சிறிய காடுகளில் வசிக்கும் வௌவால்களிடமிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. வௌவால்களின் கழிவு மற்றும் வாயிலிருந்து எடுக்கப்பட்ட எச்சில்களில் இருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கட்டாய திருமணத்தை மறுத்த இளம் யுவதி கௌரவ கொலை!

### இத்தாலியில் அதிர்ச்சி சம்பவம்

ரோம், ஜூன் 14



கட்டாய திருமணத்தை மறுத்த யுவதியை கௌரவக் கொலை செய்த சம்பவம் இத்தாலி மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. கொலையான பெண்ணின் உடலை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

ரெஜியா - எமிலியா என்ற நகரிலுள்ள பண்ணையில் அந்தப் பெண்ணின் தந்தையான ஷாபர் பணி புரிந்து வருகிறார். அங்குள்ள சி. சி. ரீ. வி. கமெரா பதிவுகளில் கடந்த மே முதலாம் திகதி கொலையுண்ட சமன் அப்பாஸ் என்ற பெண் காணப்பட்டுள்ளார்.

சுமார் ஒரு மாத காலத்திற்கும் மேலாக காணாமல் போனார் என்று குறிப்பிடப்பட்ட 18 வயதான சமன் அபாஸை அவரின் குடும்பத்தாருடன் இணைந்து மாமா முறையானவர் கழுத்தை நெரித்து கொலை செய்தார் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கட்டாய திருமணத்தை மறுத்தமையே இந்த கொலைக்கு காரணம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பாகிஸ்தானிலிருந்து புலம்பெயர்ந்த சந்தேக நபரும் அவரின் குடும்பமும் இத்தாலியில் வாழ்ந்து வந்த நிலையிலேயே இந்த கொலை இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும் சம்பவத்தின் பின்னர் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் வீட்டாருடன் முரண்பட்டு வெளியேறியுள்ளார்.

தப்பிச் சென்ற அவர் வசிக்க சென்றிருந்த இடத்தில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. இதனால் மீண்டும் வீடு திரும்பி ஆவணங்களை பெற்றுக்கொள்ள முயன்றுள்ளார். எவ்வாறாயினும் ஏப்ரல் 26 ஆம் திகதிக்கு முன்னரே கொலை குறித்து திட்டமிடப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறாயினும் கொலை சந்தேகத்தின் பேரில் இஜாஸ் என்பவர் பிரான்ஸில் கைது செய்யப்பட்டார். பெற்றோர்களான ஷப்பர் மற்றும் நாசியா ஆகியோர் பாக்கிஸ்தானுக்கு திரும்பியுள்ளனர். இவர்கள் கொலையை மறுத்துள்ளனர். (ஐ)

# யூரோ கிண்ண உதைபந்தாட்டம்: துருக்கியை வீழ்த்தியது இத்தாலி

ரோம், ஜூன் 14

யூரோ கிண்ணத்தின் தொடக்க போட்டியில் துருக்கி அணியை 0-3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது இத்தாலி.

யூரோ கிண்ண தொடர் என்று அழைக்கப்படும் ஐரோப்பிய உதை பந்தாட்ட தொடர் நள்ளிரவு ரோம் நகரில் தொடங்கியது.

முதலாவது போட்டியில் 'ஏ' பிரிவில் இடம்பிடித்துள்ள இத்தாலி - துருக்கி அணிகள் மோதின. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. ஆனாலும், இத்தாலி பல தடவைகள் அடிக்க முயன்றாலும் அதற்கு தோல்வியே கிடைத்தது.

இந்த நிலையில் இரண்டாவது பாதி ஆட்டத்தைத் தொடர்ந்து 53ஆவது நிமிடத்தில் இத்தாலியின் டொமினிகா பெரார்டி அடித்த பந்தை துருக்கி அணியின் தடுப்பாட்ட வீரர் டெமிரல் தடுக்க முயன்றார். ஆனால், பந்து அவர் மீதுபட்டு சுய கோலாக மாறியது.

யூரோ உதைபந்தாட்ட வரலாற்றில் தொடக்க ஆட்டத்தில் முதல் கோல் சுய கோலாக அடிக்கப்பட்டது இதுவே முதன்முறையாகும். டெமிரலின் சுய கோலால் இத்தாலி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 66ஆவது நிமிடத்தில் இத்தாலி தனது 2ஆவது கோலை அடித்தது.




லியோனார்டோ ஸ்பினசோலா இலக்கை நோக்கி அடித்த பந்தை துருக்கி அணியின் கோல்காப்பாளர் உகுர்கான் காகீர் தடுத்தார். ஆனால், அவர் மீது பட்டு திரும்பி வந்த பந்தை அருகில் நின்ற சிரோ இம்மொபைல் கோலாக மாற்றினார்.

79ஆவது நிமிடத்தில் துருக்கி அணியின் வலுவிழந்த தற்காப்பு வளையத்தை சரியாக பயன்படுத்திக் கொண்ட லோரென்சோ இன்சைன் பந்தைஅற்புதமாக தலையால் மோதி கோல் வலைக்குள் திணிக்க இத்தாலி 3-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதன் பின்னர் இரு அணிகள் தரப்பில் கோல் ஏதும் அடிக்கப்படவில்லை. முடிவில் இத்தாலி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் நடந்த மற்றைய போட்டிகளில், வேல்ஸ், சுவிஸ் அணிகள் மோதிய போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. (ஐ)



## மைதானத்தில் மயங்கி வீழ்ந்த டென்மார்க்க நட்சத்திர வீரர்!

ரோம், ஜூன் 14

டென்மார்க் - பின்லாந்து அணிகள் மோதிய போட்டியில் ஆட்டத்தில் டென்மார்க் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டின் எரிக்சன் மைதானத்திலேயே மயங்கி விழுந்தமை உதைபந்தாட்ட ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 24 அணிகள் கலந்து கொள்ளும் யூரோ கிண்ண உதைபந்தாட்ட தொடர் தற்போது நடக்கிறது.

இதில், நேற்று முன்தினம் நடந்த போட்டி ஒன்றில் டென்மார்க் - பின்லாந்து நாடுகளின் அணிகள் மோதின.

போட்டியின் முதல் பாதி நேர ஆட்டம் முடவடையும் தறுவாயில் டென்மார்க்கின் நட்சத்திர வீரர் கிறிஸ்டின் எரிக்சன் மைதானத்தில் ஓடிக் கொண்டிருக்கு போது திடீரென சரிந்து வீழ்ந்தார்.

அவர் தடுமாறி வீழ்ந்ததாக முதலில் கணிக்கப்பட்டது. ஆனால், சில நொடிகள் அசைவின்றி அவர் கிடந்ததை அவதானித்த சகவீரர்கள் அவரை நோக்கி ஓடினர். இதையடுத்து போட்டியை இடைநிறுத்திய நடுவர்கள் மருத்துவ குழுவை அழைத்தனர்.

அவருக்கு சுவாசம் நின்றதை அடுத்து உடனடியாக சி. பி. ஆர். எனப்படும் இதயத்தை இயங்கச் செய்வதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. அப்போது சக வீரர்கள் மருத்துவக் குழுவை அரண் போல சூழ்ந்து கொண்டனர். மேலும், கண்ணீருடன் பிரார்த்தனையிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

மைதானத்தில் என்ன நடக்கிறது என்பது புரியாத ரசிகர்கள், கிறிஸ்டினுக்கு என்ன ஆயிற்று என்று அழத் தொடங்கிய காட்சிகள் உலக உதைபந்தாட்ட ரசிகர்களையும் சோகத்தில ஆழ்த்தியது.

சுமார் அரை மணி நேரம் அவருக்கு மைதனாத்திலேயே சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு நினைவு திரும்பிய பின்னர் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இந்தக் காட்சிகள் அனைத்தும் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது. உலகம் முழுவதிலிருந்து உதைபந்தாட்ட வீரர்கள் கிறிஸ்டின் நலம் பெற வேண்டும் என்று சமூக வலைதளங்களில் பதிவிட்டனர்.

பின்னர் மருத்துவமனையில் கிறிஸ்டின் உடல்நிலை நலமாக உள்ளது என்ற செய்தி வந்தபின்னர் மைதானத்தில் ரசிகர்கள் குரல் எழுப்பத் தொடங்கினர்.

இதன் பின்னர், போட்டி தொடரப்பட்டது. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் பின்லாந்து அணி வெற்றி பெற்றது. (ஐ)

## பிரெஞ்சு ஓப்பன் பார்போரா சம்பியன்



பாரிஸ், ஜூன் 14

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசின் வீராங்கனை பார்போரா சம்பியன் பட்டம் வென்றார்.

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டம் பாரிஸ் நகரில் நேற்று நடந்தது.

இதில் ரஷ்யாவின் அனஸ்தேசியா பவ்லியுசென்கோவாவை, செக் குடியரசின் பார்போரா கிரெஜிகோவா எதிர்கொண்டார்.

மிகவும் பரபரப்பான இந்த ஆட்டத்தில் ரஷ்யாவின் பவ்லியுசென்கோவாவை 6-1, 2-6, 6-4 என்ற செற் கணக்கில் வீழ்த்தி செக் குடியரசின் பார்போரா கிரெஜிகோவா சம்பியன் பட்டம் வென்றார்.

இது பார்போரா கிரெஜிகோவா வெல்லும் முதல் கிராண்ட்ஸலம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.



## தொடரை வென்றது நியூஸிலாந்து அணி!

பர்மிங்ஹாம், ஜூன் 14

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை 8 விக்கெட்களால் வெற்றி கொண்டது நியூஸிலாந்து அணி. இதன்மூலம் அந்த அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1 - 0 என்ற கணக்கில் வெற்றி கொண்டது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள நியூஸிலாந்து அணி இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதல் போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை இரண்டாவது போட்டி ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 303 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 388 ஓட்டங்களை குவித்தது. இதில் கொன்வே 80, யங் 82, றோஸ் ரெய்லர் 80 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் பிரொட் 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து அணி 122 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் ஹென்றி, வோகர் தலா 3 விக்கெட்களையும், போல்ட், பட்டேல் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

38 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூஸிலாந்து 2 விக்கெட் இழப்புக்கு 41 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

போட்டி நாயகனாக மட் ஹென்றி தெரிவாக, தொடர் நாயகர்களாக கொன்வே, ரொறி பேர்ண்ஸ் தெரிவாகினர். (ஐ)

## தென்னாபிரிக்கா மிரட்டல்; மே.இ. தீவுகள் படுதோல்வி!

குரோஸ்ஐலட், ஜூன் 14

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை இனிங்ஸ் மற்றும் 63 ஓட்டங்களால் வெற்றி பெற்றது தென்னாபிரிக்க அணி.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு தென்னாபிரிக்க அணி சென்றுள்ளது. இரு அணிகளிடையேயும் முதல் டெஸ்ட் போட்டி கடந்த வியாழக்கிழமை தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 97 ஓட்டங்களில் சுருண்டது.

தென்னாபிரிக்கா சார்பில் பந்துவீசிய நிகிடி 5 விக்கெட்களையும், நோட்ஜே 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு டி கொக் சதம் அடித்து அசத்தினார். இதனால், அந்த அணி சகல விக்கெட்களையும் இழந்து 322 ஓட்டங்களை எடுத்தது.

225 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 4 விக்கெட்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மூன்றாம் நாளில் அந்த அணியின் வீரர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

162 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது அந்த அணி. ரோஸ்டன் சேஸ் மட்டும் 62 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தார்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் ரபாடா 5 விக்கெட்களையும், நோட்ஜே 3 விக்கெட்களையும் வீழ்த்தினர். போட்டியின் நாயகனாக டி கொக் தெரிவானார்.





# 25 உயிரிழந்த கடலாமைகள் இதுவரை கரையொதுங்கின

கொழும்பு, ஜூன் 14.

நாட்டின் சில கடற்கரைகளில் மேலும் உயிரிழந்த நிலையில் கட லாமைகள் கரையொதுங்கின. இதுவரையில் சுமார் 25 கடலாமைகள் கரையொதுங்கியுள்ளன.

கொழும்பு - காலி முகத்திடலில் நேற்றுமுன்தினம் கரையொதுங்கிய கடல் ஆமையின் உடலில் இரத்தக் கறை படிந்துள்ளது.

காலி, கொஸ்கொட, தூவே மோதர மற்றும் மஹா இந்துருவ ஆகிய கடற்கரைகளிலும் உயிரிழந்த கடல் ஆமைகள் கரையொதுங்கியுள்ளன.

இதேவேளை, கிளிநொச்சி வலைப்பாடு கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆமை ஒன்று நேற்றுமுன்தினம் கரையொதுங்கியிருந்தது.

அந்த ஆமையின் உடலை கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர். (இ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்

திருகோணமலை, ஜூன் 14

திருகோணமலை - எத்தாபெந்திவெவ பகுதியில் ஓய்வு பெற்ற சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் யானையின் தாக்குதலால் உயிரிழந்தார் என்று மொரவேவ பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான டபிள்யூ. தஸநாயக்க (வயது 63) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம், பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மொரவேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# முழுநேர பயண கட்டுப்பாட்டை இரு வாரங்கள் நீடிக்குக!

## ஜனாதிபதிக்கு மருத்துவர் சங்கம் கடிதம்

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் மேலும் இரு வாரங்களுக்கு முழுநேரப் பயணக் கட்டுப்பாட்டை நீடிக்குமாறு இலங்கை மருத்துவர் சங்கம் அரசை வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் பயணக் கட்டுப்பாடு அமுலில் உள்ள நிலையில், 2 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் பதிவாகி வருவதையும் இலங்கை மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே வைத்தியர் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 21ஆம் திகதி நீக்கப்பட்டால், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிவேகமாக மீண்டும் அதிகரிக்கத் தொடங்கும் என்றும் இலங்கை மருத்துவர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.


நாட்டில் பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் வரை 14 ஆம் திகதிக்குப் (இன்று) பின்னர் மேலும் இரண்டு வாரங்களுக்குப் பயணக்கட்டுப்பாடுகளை கடுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் வைத்தியர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

“பயணக் கட்டுப்பாடுகளின் போது செயற்படும் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் அதிகமான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதோடு, தனிமைப்படுத்தப்படுபவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டும். அத்தோடு பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிப்பதன் மூலம் சமூகத்தில் மறைந்துள்ள கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட வேண்டும்” எனவும் இலங்கை வைத்தியர் சங்கம் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளது.

ஏற்கனவே தொற்றுக்குள்ளானவர்களுக்கும், தொற்றிலிருந்து குணமடைந்து வருபவர்களுக்கும் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மூலம் புதிய தொற்றாளர்களை இனங்காண்பதற்கான வாய்ப்பு குறைக்கப்படுகின்றது” எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரி சலுகை இரத்தானால் இலங்கைக்கு பெரும் பொருளாதார நெருக்கடி

## அரசுக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 14**

**ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டுள்ள ஜி. எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இலங்கை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க எச்சரித்துள்ளார்.**

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை இரத்தானால் டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி 300 ரூபாய் வரை வீழ்ச்சயடையும். ஆயிரக்கணக்கானோர் வேலைகளை இழக்க நேரிடும். இதனால் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை முகம் கொடுக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீளப் பெற 2017 இல் எங்கள் அரசு நடவடிக்கை எடுத்தது. இதன்மூலம் வரி விதிப்பு இல்லாமல் ஐரோப்பிய நாடுகளுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்ய முடிந்தது.

ஆடை மற்றும் மீன்பிடித் தொழில்துறைகளில் சிறப்பான அடைவைப் பெற இந்தச் சலுகை வழிவகுத்தது.

இந்நிலையில், ஏற்கனவே உறுதியளித்தவாறு பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்காவிட்டால் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை இரத்துச் செய்யப்படும் என ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றம் எங்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனாத் தொற்று நோயால் நமது சுற்றுலாத்துறை ஆபத்தில் உள்ளது. “எக்ஸ் - பிரஸ் பேர்ல்“ கப்பல் எங்கள் கடலில் மூழ்கியதால் மீன்பிடித் துறையிலும் பிரச்னைகள் எழுந்துள்ளன. வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. எனவே, நமது அந்நியச் செலாவணி வீழ்ச்சியடைந்துள்ளது.

அந்நியச் செலாவணி வீழ்ச்சியால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் இலங்கை பங்களாதேஷடம் 200 மில்லியன் டொலரைக் கடனாகப் பெற்றுள்ளது.

தற்போது, தேயிலை மற்றும் ஆடைத் தொழில்களால் மட்டுமே நம் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்ட முடிகின்றது. இதிலும் நாங்கள் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை நம்பியிருக்கின்றோம். இந்த வரிச் சலுகையை இழந்தால் ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையும். ஒரு டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி சுமார் 300 ரூபாய் வரை மோசமாக வீழ்ச்சியைச் சந்திக்க நேரிடலாம். இதனால் ஆயிரக் கணக்கானோர் வேலைகளை இழக்க வேண்டி ஏற்படும்.

இவ்வாறான நெருக்கடிகள் ஏற்படுவதைத் தவிர்க்க ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பாதுகாக்க வேண்டும். அரசியலுக்கு அப்பால் இந்த விடயத்தில் அரசு உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இழப்பதன் மூலம் மக்களின் பொருளாதார சுமைகளை மேலும் அதிகரிக்க வேண்டாம். நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டாம் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றேன்” - என்றார். (இ)

# 200 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் தெற்கு கடலில் படகொன்றில் இருந்து மீட்பு!

கொழும்பு, ஜூன் 14

இலங்கையின் தெற்குக் கடல் பகுதியில் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, மீன்பிடிப் படகொன்றில் இருந்து 219 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

வெலிகம, பொல்வது முகத்துவாரம் கடல் பகுதியில் நெடுந்தூர மீன்பிடிப் படகொன்றை சுற்றிவளைத்துக் கடற்படையினர் சோதனை நடத்தியுள்ளனர்.

இதன்போது சமையல் எரிவாயு சிலிண்டர்களை வெட்டி அதனுள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



இவ்வாறு மீட்கப்பட்ட போதைப்பொருளின் பெறுமதி 200 கோடி ரூபாய்க்கு அதிகமாகும் என்று கடற்படையினர் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தப் படகில் இருந்த 6 பேரும், அவர்களுடன் கரையில் இருந்து தொடர்புகளைப் பேணிய 3 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது. (இ)

# வெளிநாட்டினர் ஹஜ் பயணம் செல்ல தடை

## சவுதி அரேபியா அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

கொரோனா பரவல் அபாயம் கருதி, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் நாட்டுக்கு இந்த ஆண்டு ஹஜ் பயணம் மேற்கொள்வதற்கு சவுதி அரேபியா தடை விதித்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு அதிகாரிகள் கூறியதாவது:-

“கொரோனா அபாயம் கருதி, ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள இந்த ஆண்டில் முழுமையாகக் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்ட 60 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது சவூதி அரேபியாவில் இருப்பவர்கள் மட்டுமே ஹஜ் பயணம் மேற்கொள்ள முடியும். வெளிநாட்டினருக்கு அனுமதி இல்லை.

18 முதல் 65 வயதுக்குட்பட்டவர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும்” - என்றனர். (இ)

## பயங்கரவாத...

டும். இல்லாவிடின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இரத்துச் செய்யவேண்டும் என்று ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

"இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன் இரத்துச் செய்ய வேண்டும் என்று அரசை வலியுறுத்துவதற்கு ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

இலங்கையின் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன்தான் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையிலுள்ளது. அதை நீக்குவதா? இல்லையா? என்பதை இலங்கை பாராளுமன்றம்தான் தீர்மானிக்க வேண்டும். அது தொடர்பில் ஐரோப்பிய பாராளுமன்றம்தீர்மானம் எடுக்க முடியாது.

நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் இருக்கின்றபடியால்தான் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களையும், அதற்குத் துணை போனவர்களையும் கைதுசெய்தோம் தற்போதும் கைதுசெய்து வருகின்றோம்.

இதேவேளை, இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை விலக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் ஐரோப்பிய பாராளுமன்றம் வலியுறுத்துவது ஒரு மனிதாபிமானமற்ற செயலாகும்.

சம்பந்தப்பட்ட தரப்புகள், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலு கையை விலக்கிக்கொள்ள மாட்டார்கள் என்றே நாம் நம்புகின்றோம்" - என்றார். (இ)

## சாகரவுக்கு...

ஆராய்ந்துள்ளனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பிலான அறிவிப்பையடுத்து, "வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில அமைச்சுப் பதவியை துறக்க வேண்டும்" என்று சிறீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சி தலைவர்களின் கூட்டமொன்று நேற்று அமைச்சர் விமல் வீரவன்சவின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, "சிறீலங்கா பொதுஜன முன்னணியின் உருவாக்கத்தில் அதிக பங்களிப்பைச் செலுத்தியவர்கள் என்ற ரீதியில் இந்த அரசில் எமக்கே அதிக உரிமைகள் உள்ளன.

இந்த அரசைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்பட்டுக்கொண்டுள்ளோம். ஆனால், சிறீலங்கா பொதுஜன முன்னணியினர் தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு அரசை பலவீனப்படுத்துவது ஏன் என்பது குறித்து ஜனாதிபதியும், பிரதமரும் ஆராய வேண்டும்" என்று கட்சித் தலைவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

அத்தோடு சாகர காரியவசம் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் பிரதமர் பின்வாங்கக்கூடாது எனவும், சாகர காரியவசம் குறித்து உடனடியாக விசாரணை ஒன்றை நடத்தி இதற்கான தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுக்கப் பிரதமர் வலியுறுத்த வேண்டும் எனவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர். (இ)

## 2,329...

களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 88 ஆயிரத்து 547 ஆக உயர்வடைந் துள்ளது.இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 136 ஆக எகிறியுள்ளது. (இ)

## பொதுஜன...

ருந்தது.ஆனால், "தவிர்க்க முடியாத காரணங்களால், இன்று காலை 10.00 மணிக்கு நெலும் மாவத்தயில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறவிருந்த ஊடகவியலாளர் சந்திப்பு இரத்து செய்யப்பட்டுள்ளது" நேற்றிரவு பொதுஜன பெரமுன அறிவித்தது.

## அரசை...

அதனை ஆட்சிப் பீடத்திலிருந்து வீழ்த்தும் அனைத்து வேலைத் திட்டத்தையும் சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து வெளிப்படையாகவே முன்னெடுப்போம்", என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும், தெரிவித்தவை வருமாறு,

கோவிட் 19 நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசாங்கத்தின் செயல்பாடுகள் மிக மோசமாகியுள்ளன. மக்கள் குறித்து எந்தவித அக்கறையும் இல்லாது ஆட்சியாளர்கள் செயல்படுகின்றனர். அது மட்டுமல்லாது, தடுப்புக்காவலில் உள்ளவர்கள் கொல்லப்படும் நிலை உருவாகியுள்ளது. மிக மோசமான மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. இவற்றுக்கு மத்தியில் கோவிட் நிலைமைகளை உபயோகித்து தமக்கு ஏற்ற வகையில் நிலைமைகளை கையாள்கின்றயால் பெரும் மனித உரிமைகள் மீறலையும் அரசாங்கம் செய்து வருகின்றது.

இவ்வாறான செயல்பாடுகளால் அரசாங்கம் மக்களின் செல்வாக்கை முற்று முழுதாக இழக்கும் நிலை உருவாகியுள்ளது என்பது தெளிவாக விளங்குகின்றது. எனவே, எதிர்க்கட்சியில் உள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பாகிய நாம், ஏனைய பிரதான எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அரசாங்கத்திற்கு எச்சரிக்கையை விடுக்கின்றோம். அரசாங்கம் சரியான முறையில் ஆட்சி செய்யவில்லை.

இது மக்கள் ஆட்சியெனவும் ஜனநாயக குடியரசு எனவும் சமத்துவ குடியரசு எனவும் எமது அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள போதிலும் இதற்கு பொருந்தாத ஆட்சியை அரசாங்கம் செய்கின்றது. எனவே இது தொடருமானால் அரசாங்கத்தை ஆட்சி பீடத்தில் இருந்து வீழ்த்தும் அனைத்து வேலைத் திட்டத்தையும் வெளிப்படையாக முன்னெடுப்போம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், ஜே.வி.பியின் தலைவர் ஆகியோரும் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதனாலேயே நாமும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

மேலும், குடும்ப ஆட்சி இருக்கவே கூடாது. ஒரு குடும்பத்தில் இருவர் ஆட்சியில் இருந்தாலே அது நல்லாட்சி தத்துவத்திற்கு மாறானது. ஆனால், இங்கே பதினாறு, பதினேழு அமைச்சுக்கள் ஒரே குடும்பத்தின் கையில் உள்ளன. ஆகவே, இந்த குடும்ப ஆட்சி தொடரக்கூடாது. குறிப்பாக இந்த இடர் காலத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி அவர்கள் செய்யும் முறையற்ற ஆட்சி நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கூறியிருந்தார். (ஐ)

## படகு...

பாதுகாப்பினையும் கண்காணிப்பையும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

ஆயுதங்கள் ஏந்தியவர்களுடன் படகொன்று இராமேஸ்வரத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருப்பதாக இந்திய புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன. இவர்கள் யார் எந்த அமைப்பை சேர்ந்தவர்கள் என்பது குறித்த விபரங்களை தெரியவில்லை என புலனாய்வு பிரிவினர் ஐ.எ.என்.எஸ். செய்தி சேவைக்கு தெரிவித்துள்ளனர்.

எச்சரிக்கை கிடைத்துள்ளது உண்மை ஆனால் மேலதிக தகவல்களை வெளியிட முடியாது என சென்னை பொலிஸ் தலைமையகத்தை சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கரையோர பகுதிகளிற்கு செல்லும் வீதிகளில் பொலிஸாரை நடவடிக்கையில் ஈடுபடுத்தியுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மலையக அரசியல் தலைமைகளுடன் இணைந்து செயற்பட முன்னணி தயார்

### ஆனால் கொள்கையை அவர்கள் மாற்ற வேண்டும் மஸ்கெலியாவில் கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

மஸ்கெலியா, ஜுன் 14.

"தங்களது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிப் பொதுவானதொரு நிலைப்பாட்டுக்கு மலையக அரசியல் தலைமைகள் வருவார்களாக இருந்தால் அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்துள்ளது. அதன்படி நேற்று மஸ்கெலியா பகுதியில் 600 குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வின் பின்னர் சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். அதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே எமது கருத்தாகும். மலையக மற்றும் முஸ்லிம் தலைமைகளுடன் இணைந்து செயற்படுவதற்கான முயற்சிகள் கடந்தகாலங்களிலும் முன்னெடுக்கப்பட்டன. எனினும், கொள்கை ரீதியிலான முரண்பாட்டால் பொதுவானதொரு நிலைப்பாட்டுக்கு வரமுடியவில்லை.

நிலைமையை உணர்ந்து, மலையக மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைகள், வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களோடு பொது நிலைப்பாட்டை எடுத்து, தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் விதத்தில் தங்களின் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டால் அவர்களுடன் இணைந்து செயல்படுவதில் எந்தப் பிரச்னையும் இல்லை" - என்றார். (இ)

## ராஜபக்ஷக்களின்...

இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

"அமைச்சுப் பதவியிலிருந்து நான் இராஜிநாமா செய்ய வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் தீர்மானத்தை எதிர்க்கும் அவர்களின் கட்சி பொதுச்செயலாளரான சாகர காரியவசமே பதவி விலக வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார்.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் அறிக்கை வெளியிட்டிருந்த ஆளும் கட்சியான சிறீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், இந்த விடயத்துக்குப் பொறுப்பேற்று வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில பதவி விலக வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் வலு சக்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் வாழ்க்கைச்செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவே தீர்மானித்தது. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களான பந்துல குணவர்தன, நாமல் ராஜபக்ச, மஹிந்தானந்த அளுத்கமகே, டலஸ் அழகபெரும, டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட நானும், இராஜாங்க அமைச்சர்களான அஜிட் நிவாட் கப்ரால், லசந்த அழகியவண்ண உள்ளிட்டவர்கள் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர். எனவே, இது என்னால் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவு கிடையாது.

எரிபொருள் விலை உயர்வு தொடர்பான அறிவிப்பை நிதி அமைச்சே வெளியிடும். எனினும், இது தொடர்பான அறிவிப்பை நானே விரும்பி வெளியிட்டேன். பிரதமரின் பிரதிநிதியாக இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பங்கேற்றிருந்தார். அரச தலைவர்களைப் பாதுகாக்கவே நான் இவ்வாறு செயற்பட்டேன்.

அத்துடன், சிறீலங்கா பொதுஜன முன்னணியின் கூட்டம் இடம்பெறாமலேயே கட்சியின் செயலாளர் மேற்படி அறிக்கையை வெளியிட்டுள்ளார். அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்தனர். கட்சியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தவிசாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோருக்குக்கூட இது பற்றி தெரியாது.

குறிப்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை விமர்சித்தே சாகர காரியவசம் அறிக்கை விடுத்துள்ளார். இதற்கான அதிகாரத்தை அவருக்கு வழங்கியது யார்? அரசின் தீர்மானத்தை விமர்சித்து அவர் தவறிழைத்துள்ளார்.

எரிபொருள் விலை உயர்வுக்குப் பொறுப்புக்கூற வேண்டியது யார் என்பது தொடர்பில் பகிரங்க விவாதத்துக்குச் சாகர காரியவசம் வரவேண்டும். அதற்கான சவாலை நான் விடுக்கின்றேன்.

எனவே, நான் பதவி விலக வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதி, பிரதமரின் தீர்மானத்தை எதிர்க்கும் அவர்களின் கட்சி செயலாளரான சாகர காரியவசமே பதவி விலக வேண்டும்" - என்றார். (இ)

## யாழில்...

மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த 10 பேருமாக 18 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதேபோன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடத்தின் சோதனையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 4 பேருக்கும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையை சேர்ந்த ஒருவரும், யாழ். போதனா வைத்தியசாலையை சேர்ந்த ஒருவருமாக 6 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதுதவிர, வவுனியாவில் ஒருவரும், மன்னாரில் இருவருமாக வடக்கு மாகாணத்தில் நேற்று 27 பேர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர். (ஐ)

## எரிபொருள்...

நள்ளிரவு முதல் நாட்டில் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புகளை வெளியிட்டு வரும் நிலையில் அது குறித்து விளக்கமளித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று மாலை அறிக்கையொன்றை வெளியிட்டு மேற்கண்டாவறு கூறியுள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து ஜனாதிபதி தலைமையில் பிரதமர் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பங்கேற்பில் இடம்பெற்ற வாழ்க்கைச் செலவு குழுவில் அவதானம் செலுத்தப்பட்ட பின்னரே, இங்கு அதன் விலைகளை அதிகரிக்க முடிவெடுக்கப்பட்டது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

ஈழநாடு
Eelanadu

# அமைச்சர் கம்மன்பில மாத்திரமல்ல முழு அரசும் பதவி விலக வேண்டும்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் வலியுறுத்து



**கொழும்பு, ஜூன் 14**

**“எரிபொருள் விலையை அதிகரித்து மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியுள்ள அரசு அதன் பழியை தனிநபர் மீது சுமத்த முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.எவ்வாறிருப்பினும் தொடர்ந்தும் மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கும் இந்த அரசு நாட்டை சிறப்பாக நிர்வகிக்கக் கூடியவர்களிடம் அதனை ஒப்படைத்து விட்டு பதவி விலகுவதே சிறந்தது.”**

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்துக்கான பொறுப்பை ஏற்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலக வேண்டும் என்று சிறீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“எரிபொருள் விலையை அதிகரித்து மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியுள்ள அரசு அதன் பழியை தனிநபர் மீது சுமத்த முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். எவ்வாறிருப்பினும் சிறீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள குறித்த அறிக்கை அரசுக்குள் காணப்படும் பாரிய முரண்பாடுகளை வெளிக்கொணர்ந்துள்ளது.

தமது கட்சியே இந்த நாட்டை ஆட்சி செய்கின்றது என்று குறிப்பிடும் வகையில் அவரால் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கை அபாயம் மிக்கதாகவுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அரசிடமும் பொதுஜன முன்னணியிடமும் கேட்பதற்குப் பல கேள்விகள் எழுந்துள்ளன.

அரசும் அறியாத வகையில் எரிபொருள் விலையைத் திடீரென அதிகரிப்பதற்கு அமைச்சரொருவர் மாத்திரம் எவ்வாறு தன்னிச்சையாகத் தீர்மானித்தார் ? அவ்வாறு அவர் தனித்துத் தீர்மானமொன்றை எடுத்திருப்பாராயின் அமைச்சரவையின் ஒழுங்கு விதிகளை மீறி தனியொரு அமைச்சரால் இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்படும் வரை அரசின் பிரதானிகளான ஜனாதிபதியும் பிரதமரும் என்ன செய்து கொண்டிருந்தனர் ?

வழமையாக இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டால் அது அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானமாகவே கருத்தப்படும். அவ்வாறிருக்கையில் எவ்வாறு குறிப்பிட்டவொரு அமைச்சர் மீது மாத்திரம் குற்றம் சுமத்தப்படுகின்றது?

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தெரிவித்தது உண்மைக்குப் புறம்பாகவா? அவ்வாறெனில் அது கற்பனைக் கதையா? குறித்த அமைச்சர் இவர்களுக்கு அப்பால் செயற்படுகின்றாரா?

இந்த அரசால் அண்மைக்காலங்களில் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கும் பல தீர்மானங்கள் மிகவும் இரகசியமாக சூட்சுமமான முறையில் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால், திடீரென இந்தத் தீர்மானத்துக்கு மாத்திரம் பொதுஜன முன்னணி பகிரங்க அறிக்கையை வெளியிட்டுள்ளமையானது அரசுக்குள் காணப்படும் பாரிய முரண்பாடுகளை வெளிப்படுத்தவில்லையா?

இவ்வாறான அறிக்கைகள் ஊடாக அரசானது தம் மீது தவறில்லை என்று நிரூபிக்க முற்படுகின்றது. எனவே, எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு எடுத்துள்ள தீர்மானத்தை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமே தவிர இதிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சிக்கக் கூடாது. இந்தத் தீர்மானத்தில் மாற்றம் வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் பிரயோகிப்பதற்கான மக்கள் குரல் தோன்றிவிட்டது. தற்போது அரசு மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை முழுமையாக இழந்துள்ளனர்” - என்றுள்ளது. (இ)

# 5 ஆயிரம் ரூபா அரச கொடுப்பனவு ராஜபக்ஷ அரசின் பொய்ப் பிரசாரம்

## உதயகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 14

“நாட்டில் தொடர்ந்து பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்பட்டுள்ளதால் தற்போது வாழ்வாதாரத்தை இழந்து அல்லலுறும் மக்களுக்கு உரிய நிவாரணத்தை வழங்குவது தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.”

- இவ்வாறு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“பயணக் கட்டுப்பாட்டினால் வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் அரச நிவாரணம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்தபோதும் இந்த நிவாரணம் உரியவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

சமுர்த்தி பெறுநர்களுக்கு மாத்திரமே பெரும்பாலும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ள போதும் இந்தத் தொகை சமுர்த்தி பெறுநர்களுக்கு முறையாகக் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இவ்வாறான நிலையில் அன்றாடம் தொழில் செய்து அதன் மூலம் வருமானம் தேடி தமது குடும்பத்தை வழி நடத்தி வந்த இலட்சக்கணக்கானோர் இன்று பயணக் கட்டுப்பாட்டு காரணமாக எவ்வித வருமானமும் இன்றி வறிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறானவர்களுக்கு இதுவரை அரசின் 5 ஆயிரம் ரூபாய் நிவாரணக் கொடுப்பனவு கிடைக்க வில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும்.

தோட்டப் பகுதிகளைப் பொறுத்தவரையில் ஒரே குடும்பத்தில் பல உப - குடும்பங்களும் உள்ளன. அரச நிவாரணக் கொடுப்பனவில் இந்த உப குடும்பங்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.

5 ஆயிரம் ரூபாய் அரச நிவாரணக் கொடுப்பனவு என்ற அறிவித்தலானது அரசின் பொய்ப் பிரசாரம் என்று மக்கள் தற்போது கூறத் தொடங்கியுள்ளனர்.

எனவே, தொடர்ந்து நாடு முடக்கப்பட்டுள்ளதால் வாழ்வாதாரங்களை இழந்த மக்களுக்கு அரசு பாரபட்சமின்றி நிவாரணக் கொடுப்பனவை வழங்க வேண்டும்”

# சிறைக் கைதிகள் ‘சூம்’ மூலம் உறவுகளுடன் பேச வாய்ப்பு!



கொழும்பு, ஜூன் 14

இலங்கை சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு தமது உறவுகளைச் சந்திக்கும் சந்தர்ப்பத்தை ‘சூம்’ தொழில் நுட்பத்தின் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாக சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் மறுவாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் முதல் கட்டமாக, இந்தத் திட்டம் வெலிக்கடை, அங்குனகொலபெலஸ்ஸ, பூஸா உள்ளிட்ட 6 சிறைச்சாலைகளில் முன்னெடுக் கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

கைதிகள் மத்தியில் கொரோனாத் தொற்று பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாக அறிமுகப்படுத்தப் பட வுள்ள இந்தத் திட்டமானது, எதிர்காலத்தில் ஏனைய சிறைச்சாலைகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த குறிப்பிட்டார்.

கைதிகளின் சிறை இலக்கம் மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் நேரத்தில் ‘சூம்’ தொழில்நுட்பத்தின் மூலம் அவர்கள் தமது உறவுகள் மற்றும் நண்பர்களுடன் பேச முடியும் எனவும் அவர் மேலும் கூறினார். (இ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.06.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-உளவளத்துனையாளர் நா.நவராஜ்



7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சுப்பர் குறூப்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க

**பகல்**
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஓ காதல் கண்மணி-வேதாளம் திரைப்பட காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா -மருத்துவர் S.கேதீஸ்வரன்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு